# ஞானசம்பந்த

மலர் 11 ]     கரஹு மார்கழிமீ 10—1—52.     [இதழ் 2.



திருந்துதேவன்குடி
ஆலயத்தில்
நண்டு பூசித்த
விநாயகர்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீன

## குடந்தையில் ஆண்டுவிழா.

திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் நாலாவது ஆண்டு நிறைவுவிழா மார்கழி ௴ 15௳ முதல் 18௳ முடிய நான்குநாட்களும் ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர சுவாமி ஆலய மங்களவிலாச நூல்நிலையத் திருக்கல்யாணமண்டபத்தில் நிகழ்ந்தது. திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள், பழநி சைவசித்தாந்த சரபம் சிவத்திரு ஈசானசிவாசாரியார், மதுரை ஆதீனம் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். பேரறிஞர்கள் பலர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். ஆலய வழிபாடு, திருமுறை வழிபாடு, அறுபான்மும்மை நாயன்மார்கட்கு அபிஷேக ஆராதனை ஆகியனவும் விமரிசையாக நடந்தேறின.

சீகாழி கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், ஆதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் V. S. குருசாமி ஆகியோர்கள் ஆதீனத்தின் சார்பில் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரையும் அனுப்பிவைக்கப்பெற்றது.


## தருமபுர ஆதீனப் பிரசாரம்

தருமபுர ஆதீனத்துக்குச்சொந்தமான மாயூரம் ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமிகோயில் திருவீதியில் ஆதீனத்தேவாரபாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களைக்கொண்டு திருப்பள்ளியெழுச்சிப் பாராயணம் செய்ய ஏற்பாடுசெய்யப்பெற்றது. பாராயணம் முடிந்தவுடன் ஆதீனப் பிரசாரகோஷ்டித்தலைவர் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள் அவர்களும், ஆசிரியர்களும் திருவெம்பாவையில் இரண்டு இரண்டு பாடலாக நாடோறும் விளக்கவுரை சொல்லி வந்தார்கள். ஒலி பெருக்கிச் சாதனமும் அமைக்கப்பட்டிருந்தது.

## தருமபுர ஆதீனத்திற்குத் தஞ்சை கலெக்டர் வருகை.

தஞ்சை கலெக்டர் உயர்திரு, K. பழநியப்பன் அவர்கள் 6-1-52 காலை 10-மணிக்கு ஆதீனத்திற்கு விஜயஞ்செய்தார்கள். மடாலய முகப்பாகிய அப்பர் நிலையத்திலேயே ஆதீனஅடியார் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான்சுவாமிகள் மாலைசூட்டி வரவேற்றார்கள் ஆதீன நூல் நிலையம், குருஞானசம்பந்தர் ஆலயம், முதலிய யாவற்றையும் கண்டு களித்தார்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் நெடுநேரம் சமயஉண்மைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, பின் விடைபெற்றுக் கொண்டார்கள்.

## ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தனுர்மாத யாத்திரையில்.



மேல்: திருநல்லூர். திருக்கஞ்சனூர்.
நடு: ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்.
கீழ்: மேலைத்திருக்காட்டுப்பள்ளி—காவிரிதோற்றம்.
திருக்கண்டியூர்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 11]  கரஉ மார்கழிமீ 10—1—52.  [இதழ் 2

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## சிந்தனையில் வந்தன சில...

மார்கழிமாதம் புனிதமானது. திருப்பள்ளியெழுச்சி வழிபாடு நடைபெறும்நாள். இந்தமாதத்திற்குள் எங்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருப்பாடல் பெற்ற 108 தலங்களை வழிபடத் திருவுள்ளங்கொண்டார்கள். அதன்படி வழிபாடு நன்கு நிறைவேறியது. எங்கட்கும் அவர்களுடன் சென்று வழிபடும்பேறு திருவருள்வாய்ப்பாகக் கிட்டியது. சிலதலங்களைத்தரிசித்தபோது எங்கள் மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்துக் கூத்தாடும்; சில தலங்களைத் தரிசித்தபோது அத்தகையநிலை ஏற்படுவதில்லை. உதாரணமாகத் திருந்துதேவன்குடியையும், திருக்கலிக்காமூரையும் வழிபடச்சென்றபோது என்னமோ மனவேதனையாய் இருந்தது. எங்கள் சிந்தையே வெடித்துவிடும்போலாயிற்று. ஏன்தெரியுமா? கர்ப்பக்கிருகம், திருமதில், கோபுரம் எங்குபார்த்தாலும் செடியும் கொடியும்; சில இடங்கள் பழுதுபட்டுள்ளன. புதரிலே

பெருமான் வசிக்கிறார். புற்றிலும் புதரிலும் வசிப்பது அவர்க்கு இயற்கையானாலும் அன்பர்களுக்கு அச்சம் தோன்றாமல் இருக்கவேண்டுமே! இதற்கு என்ன செய்யலாம் இறைவனே! என்று ஏங்கியிருக்கும்பொழுது சில எண்ண அலைகள் அடிக்கடி தோன்றி மறைந்தன. அவற்றை விளக்கும் ஒரு கற்பனையும் உருவாயிற்று. அதனை நமது நேயர்களுக்கு அறிவித்துக் கொள்ள வேண்டியது கடமையாகிறது.

வேட்டகத்துக்குப்போகும்பெண்கள் ஏதோ ஒன்று இரண்டுலக்ஷரூபாய் சீதனத்தோடு போனால் சிறப்புத் தானே! போனதும் மாப்பிள்ளையும், மாமனும், மாமியும் பணத்திற்காகவாவது மருமகளை வரவேற்று, பெற்றெடுத்த பெண்ணைக்காட்டிலும் சீராட்டிப் பாராட்டி வளர்ப்பார்களல்லவா? அதுபோல நேற்றுவரையில் அரசியல் தலைவன் கருணைபெற்றுவந்த அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தலைவி இன்று அரசியல் தலைவருக்கே வாழ்க்கைப்பட்டு அரசாங்க வேட்டகத்திற்குப் போகிறபோது லக்ஷக்கணக்கான ரூபாயைக் கொண்டுதான் போயிருக்கிறாள். அவ்வளவு ரூபாய்களும் பல கோயில்களிலிருந்து கட்டணத்தொகையாகவசூலித்துச் சேர்த்து வைக்கப்பட்டவையே. புகழேந்தியார் வரலாற்றில் குலோத்துங்க சோழன் மகள் பாண்டியனை மணந்து கொண்டாள். புக்ககத்திற்குப் போகிறபோது பொருளோடுமட்டுமா போனாள்! ஒரு புலவர்; அலுவலாளர்கள் பலர்; ஏவற்பெண்டிர்; தோழியர் எல்லார்களோடுந்தான் போனாள். மகள் வாழ்விலிருந்து மனைவி வாழ்விற்காகப் போகின்ற அவள்மனக்கற்பனை எவ்வளவோ இருந்திருக்கும். அதற்கு உற்றகாலத்துத் துணை செய்யவே அவள் அனைவரையும் அழைத்துச்சென்றது. அதுபோலவே இன்றைய அறநிலையப் பாதுகாப்புக் கழகமும் பணியாளர் பலரோடும் - தக்க பேரறிஞர்களோடும் - பணத்தோடும் அரசாங்கப்புக்ககத்திற்குப் புகுந்திருக்கின்றது, மகளாயிருந்தகாலத்தைக் காட்டிலும் மன்னன் மனைவி

யாக இருக்கின்றகாலத்தில் ஆட்சி அதிகந்தானே! அவள் என்ன சொன்னாலும் அரசன் கேட்கத்தானே செய்வான். அதிலும் தன் சீதனச்சொத்தின் விநியோகத்தைப்பற்றிச் சொன்னால் அரசன் கேட்காமல் இருக்கமுடியுமா? ஆதலால் இன்றைய அறநிலையப் பாதுகாப்புத் தலைவியைப் பார்த்து ஒன்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

தாங்கள் கொண்டுபோன சீதனம் ஏழைக்கோயில் களிலிருந்தும், பணக்காரக் கோயில்களிலிருந்தும் திரட்டப்பட்டவை. பணக்காரக் கோயில்கள் தாமும் உண்டு உடுத்து வளர்ந்து, உற்றாரைக் காப்பாற்றி, பெண்ணிற்கும் சீர்கொடுக்கும் தன்மையில் இருப்பன. ஏழைக்கோயில்களோ வயிற்றை ஒடுக்கி வாயை ஒடுக்கிச் செல்விக்குச் சீதனம் கொடுத்தால் போதும் என்று கொடுத்தவை. தாயகம் வயிற்றுக்கில்லாது வாடிமடிய – சுக்குநூறாகப்பிளந்து இடிந்துவிழச் சீதனம் கொண்டு போன செல்வி பார்த்துக்கொண்டிருப்பாளா? பார்த்துக் கொண்டிருப்பதுதான் மகண்மையா? முறையா? தான் செல்வச்செருக்கில் திளைக்கும்மகள் ஏழைத் தாயகத்தை எட்டிப் பார்ப்பதும் இன்றைய உலகவழக்கில்லைதான். நல்லகுலத்திற்பிறந்த மகள் அப்படி இருக்கமாட்டாள் அல்லவா?

இன்றைக்குக் கோயில் கண்காணிப்பாளர்கட்குப் போக்குவரத்து வசதிகளுடைய பெரிய கோயில்களைப் பார்வையிட வசதிகள் இருக்கின்றன. மூலைமுடுக்குகளில் ஆலம் விழுதோடும் வேப்பம் வேரோடும் போராடிக் கொண்டு, பாம்புக்கும் பல்லிக்கும் பதுங்க இடம்கொடுத் துக் கொண்டிருக்கும் ஏழைக் கோயிலை எப்படி எட்டிப் பார்க்கமுடியும்? இந்த நிலைமை மன்னன் மனைவியான அறநிலையப் பாதுகாப்புத் தலைவிக்குத் தெரிவித்துக் கொள்கிறோம் ஏழைக் கோயிலின் துன்பத்திற்குப் பரிகாரந்தேடவேண்டும் என்று.

அவளுக்கு ஒரு விண்ணப்பம் விடுத்துக்கொள்கிறோம். அம்மா! அரசி!! நீ இன்றும், ஏழையாக இருக்கிற எங்களுடைய மகள் தான்; எங்கள் இடங்கள் இடிந்து விழுந்துகொண்டிருக்கின்றதைப் பார்த்துக் கொண்டிராதே.

நாம் சொல்வது புதிதல்ல; மூன்றும் இராஜராஜனுடைய (கி. பி. 1216–1246.) ஆட்சிக் காலத்திலேயே ஒரு சிறந்த ஏற்பாடு நடந்திருக்கிறது. தில்லையில் தேவ காரியங்களைக் கண்காணிப்பவர்களே சோழநாட்டுத் தேவாலயங்களையும் கண்காணிப்பவர்களாக இருந்து வந்தார்கள். திருக்கண்ணபுரத்து இராமனதீச்சுவரக் கோயில் வருவாய் குறைந்து பூசைக்கு முட்டுப்பாடு ஏற்பட, கோயில்தானத்தாரும் மாகேசுரரும் தில்லைப் பெரும்பற்றப்புலியூர்கோயில்தானத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்ள, அவர்கள் சோழமண்டலம், இராஜராஜப் பாண்டிமண்டலம், வீரசோழமண்டலம், நடுவில் நாடு, தொண்டைநாடு, ஜெயங்கொண்டசோழமண்டலம் இவற்றிலுள்ள கோயிலார்களை நெல்லாகவோ பொன்னாகவோ கொடுத்துதவி இராமனதீச்சுவரக் கோயில் பூசை நன்றாக நடைபெறும்படி ஏற்பாடு செய்வித்தார்கள் என்று அவனது 16-ம் ஆண்டு இராமனதீச்சுவரக் கல்வெட்டுக் கூறுகிறது. இந்தச் சரித்திர ஆதாரத்தை நன்றாகச் சிந்தித்துப்பார். உன்னுடைய சீதனப் பணத்தைத் தனியாக மூதலீடு செய்வித்து அதன் வருவாயிலிருந்து ஏழைக்கோயில் திருப்பணியை ஆண்டு தோறும் ஒவ்வொன்றாகச் செய்வித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

தென்னாட்டுப் பெருமை முழுவதும் திருக்கோயிலையும், சிற்பங்களையும், சித்திரங்களையும், தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற திருவருளமைப்பையும் பொறுத்தே இருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதனைப் பாதுகாப்பதே நமது கடமை.

இந்தப் பெருந்தொகையை அப்படியே முதலீடு செய்து அதன் வட்டி வருவாயைக்கொண்டு, வருஷம் இரண்டு சிறு கோயில்களாக இருக்கின்ற நிலையிலேயே வைத்து, திருப்பணி செய்துவந்தால் கலையைக் காப்பாற்றிய புண்ணியமும், கடவுளை வழிபட்ட புண்ணியமும், பெரும்பான்மையான மக்களுடைய மனத்தைக் கவர்ந்த மகிழ்ச்சியையும் தாயே! தங்களுக்குச்சேரும்.

ஆதலால் அந்த லக்ஷக்கணக்கான ரூபாயையும் முதலீடு செய்தும், ஏனைய பெரியகோயில்களின் உபரி வருமானத்தைக் கொண்டும் இத்தகைய சிறிய – சிறந்த பாடல் பெற்ற திருத்தலங்களைத் திருப்பணி செய்து காப்பாற்றுவது அரசுக்கு அழியாப்புகழை ஆக்குவதாகும்.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் – உரைவளம்" பொருட்பால்

அறத்துப்பாலைப் போலவே உரைப்பகுதி, உரைவிளக்கப் பகுதி, மேற்கோள்பகுதி, ஒப்புமைப்பகுதி, இவைகள் அடங்கியன. சிறப்பாகத் தொகுப்புரை, முதுமொழிவெண்பாக்கள், பழமொழிப்பகுதிகள், குறிப்புரை ஆகிய இவைகளும் இந்தப் பதிப்பில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. M. O. மூலம் முன்பணம் அனுப்பிப் பெறவேண்டும்.

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.
காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0
தபாற்செலவு வகையரு ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :-

K. பாலநாதன்,
செயலாளர்,
'ஞானசம்பந்தம்' காரியாலயம்,
தருமபுரம், மாயூரம் P. O.

---

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

# தனுர்மாதத்தில் வழிபாடு செய்தருளிய

## * சிவஸ்தலங்களின் விபரம்.

1. திருப்புள்ளிருக்குவேளூர்: தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமானது. சுவாமிபெயர் வைத்தியநாதர். அம்மைபெயர் தையல்நாயகி. சம்பந்தர்பதிகம் 1. அப்பர் பதிகம் 2. ஆக பதிகம் மூன்று. வைத்தீஸ்வரன் கோயில் என்பது இப்பொழுது வழங்கும் தலப்பெயர்.

2. சீகாழி: தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமானது. திருஞானசம்பந்தர், கணநாதர் அவதரித்த பதி. இறைவர் பிரமபுரீசுவரர், இறைவி திருநிலைநாயகி, சம்பந்தர் 67. அப்பர் 3. சுந்தரர் 1. ஆக பதிகம் எழுபத்தொன்று. சட்டைநாதர்; தோணியப்பர் ஆகிய மூர்த்திகள் இத்தலத்திற்கு அநுக்கிரகமூர்த்திகள். பிரமபுரம், வேணுபுரம் முதலிய 12 பெயர்களால் இத்தலம் தேவாரத்தில் போற்றப்படுகிறது.

3. திருநல்லூர்ப் பெருமணம்: திருஞானசம்பந்தப் பெருமான் தமது திருமணத்தில் அடியார் கூட்டத்துடன் சிவத்சோதியுள் கலந்த தலம். தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்திற்குட்பட்டது. இறைவர் சிவலோகத்தியாகர்; இறைவி திருவெண்ணீற்றுமை. சம்பந்தர் பதிகம் 1. ஆச்சாபுரம் என்று இப்பொழுது வழங்குகிறது.

---

* சுவாமி அம்மன் திருப்பெயர்கள் ஆங்காங்கு நேரே கேட்டுக்குறித்தமையின் இவைகளுக்கும், இதுவரையில் வெளிவந்த நூல்களில் காணப்படுபவைகளுக்கும் சிறிது வேறுபாடு தெரிகிறது.

4. திருமயிலாடுதுறை: திருவாவடுதுறை ஆதீன ஆளுகைக்குட்பட்டது. இறைவர் மாயூரநாதர்; இறைவி அஞ்சல்நாயகி. அம்மையார் மயிலுருவாகி வழிபடப் பெற்றது. ரிஷபதீர்த்தம். ஆலயத்தின் ஒரு பகுதியாகிய குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்மட்டும் தருமபுர ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டது. சம்பந்தர் 2. அப்பர் 1. ஆக பதிகம் மூன்று.

5. திருத்துருத்தி: இது தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமானது. இறைவர் சொன்னவாறறிவார்; இறைவி மிருதுமுகிழாம்பிகை. சுந்தரருக்கு உடற்பிணி நீக்கிய தலம். குத்தாலம் என வழங்கப்பெறுகிறது. சம்பந்தர் 1. அப்பர் 1. சுந்தரர் 1. ஆக பதிகம் மூன்று.

6. திருவேள்விக்குடி: இறைவர் கலியாணசுந்தரர்; இறைவி பரிமளசுகந்தநாயகி. சம்பந்தர் 1. சுந்தரர் 1. ஆக பதிகம் இரண்டு.

7. திருப்பந்தணைநல்லூர்: இறைவர் பசுபதீஸ்வரர்; இறைவி காம்பன்னதோளி. அம்மையார் பசு உருவாகி வழிபடப்பெற்ற சிறப்பினது. சம்பந்தர் 1. அப்பர் 1. ஆக பதிகம் இரண்டு.

8. திருஇரும்பூளை: இறைவர் ஆபத்ஸகாயர்; இறைவி ஏலவார்குழலி. இங்கு தட்சிணாமூர்த்தி விசேஷமானது. சம்பந்தர் பதிகம் 1. ஆலங்குடி என்பது இப்பொழுது வழங்கும் பெயர்.

9. திருக்கருக்குடி: இறைவர் சற்குணலிங்கேஸ்வரர்; இறைவி சர்வாலங்காரமின்னம்மை. சம்பந்தர் பதிகம் 1. மருதாநல்லூர் என்ற பெயர் இப்பொழுது வழங்குகிறது.

10. திருக்கலயநல்லூர்: இறைவர் அமிர்தக்லச நாதர். இறைவி அமிர்தவல்லி. சுந்தரர்பதிகம் ஒன்று. சாக்கோட்டை என இப்பொழுது வழங்குகிறது.

11. திருச்சிவபுரம்: இறைவர் சிவபுரநாதர். இறைவி சிங்காரவல்லி. சம்பந்தர் 3, அப்பர் 1. ஆக பதிகம் 4.

12. திருநாகேச்சரம்: இறைவர் நாகநாதர். இறைவி குன்றமுலைநாயகி. சேக்கிழார் அபிமானதலம். சம்பந்தர் 2, அப்பர் 3, சுந்தரர் 1, ஆக பதிகம் ஆறு.

13. திருநீலக்குடி: இறைவர் பெயர் மனோக்கிய நாதர். இறைவி அபிராமி. திருவாவடுதுறை ஆதீன ஆளுகைக்குட்பட்டது. அப்பர்பதிகம் ஒன்று. தென்னலக்குடி என இப்பொழுது பெயர் வழங்குகிறது.

14. திருத்தென்குரங்காடுதுறை: இறைவர் ஆபத்சகாயர். இறைவி பவள்க்கொடியம்மை. சுக்ரீவன் பூசித்தது. சம்பந்தர் 1. அப்பர் 1. ஆக பதிகம் இரண்டு. ஆடுதுறை என்று பெயர் வழங்கப்படுகிறது.

15. திருவிளநகர்: தருமபுர ஆதீன ஆளுகைக்கு உட்பட்டது. இறைவர் துறைகாட்டும் வள்ளலார். இறைவி தோளியம்மை. சம்பந்தர் பதிகம் ஒன்று.

16. திருச்செம்பொன்பள்ளி: இறைவர் சுவர்ணபுரீசுவரர். இறைவி சுகந்தகுந்தளாம்பிகை. சம்பந்தர் 1, அப்பர் 2. ஆக பதிகம் மூன்று. செம்பொனார்கோயில் எனப் பெயர் வழங்குகிறது.

17. திருஆக்கூர்: ஆலயத்தின் பெயர் தான்தோன்றிமாடம். இறைவர் தான்றோன்றீசர். இறைவி கட்கநேத்திரதேவி. சிறப்புலிநாயனர் அவதாரஸ்தலம். சம்பந்தர் 1, அப்பர் 1 ஆக பதிகம் இரண்டு.

18. திருக்கடவூர்: வீரட்டத்தலங்களுள் ஒன்று. காலசங்காரத்தலம். இங்கு காலசம்ஹாரமூர்த்தி சிறப்பு. குங்குலியக்கலயர், காரிநாயனர், அபிராமிபட்டர், உய்யவந்தார் இவர்கள் அவதாரஸ்தலம். இறைவர் அமிர்தகடேசர், இறைவி அபிராமி. சம்பந்தர் 1, அப்பர் 3, சுந்தரர் 1 ஆக பதிகம் ஐந்து. தருமபுர ஆதீனத்திற்கு உட்பட்டது.

19. திருக்கடவூர்மயானம்: இறைவர் பிரமபுரீஸ்வரர். இறைவி வாடாமுலையம்மை. சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 1. ஆகபதிகம் மூன்று. தற்போது வழங்கும் பெயர் திருமெஞ்ஞானம்.

20. திருப்பறியலூர்: அட்டவீரட்டத்துள் ஒன்று. தக்கயாகம் நிகழ்ந்த இடம். வீரபத்திரமூர்த்தி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்றார். இறைவர் வீரட்டேசுவரர். இறைவி பாலாம்பாள். தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமானது. சம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது. பரசலூர் என்பது இப்போது வழங்கும்பெயர்.

21. திருநனிபள்ளி: இறைவர் நற்றுணைநாதர். இறைவி பர்வதராஜபுத்திரி. இங்கு துர்க்கை விசேஷம். சம்பந்தர்தாயார் அவதாரத்தலம், சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 1. ஆகபதிகம் மூன்று. இப்போது புஞ்சை என வழங்கப்பெறுகிறது.

22. திருப்பல்லவனீச்சரம்: இயற்பகை நாயனர் அவதாரஸ்தலம். இறைவர் பல்லவனேசுவரர். இறைவி சௌந்தரநாயகி. சம்பந்தர் பதிகம் இரண்டுபெற்றது. 'பட்டினத்துறை பல்லவனீச்சரம்' என்று பாராட்டுகிறது தேவாரம்.

23. திருச்சாய்க்காடு: இயற்பகைநாயனர் தனது மனைவியை இறைவனுக்காக்கி, அவ்விருவரையும் சிறிது தூரம் வழியனுப்பி விடைபெற்றுக்கொண்ட தலம்.

இறைவர் சாயாவனேசுவரர். இறைவி குயிலினும்நன் மொழிஅம்மை. சம்பந்தர் 2, அப்பர் 2 ஆக பதிகம் நான்கு. சாயாவனம் என வழங்குகிறது.

24. திருவெண்காடு: அகோரமூர்த்திக்கு ஞாயிறு வழிபாடு மிகவிசேஷம். ஸ்ரீமெய்கண்டார் தந்தையாரும் தாயாரும் இங்கு வந்து முக்குளநீராடி வழிபட்டு மெய் கண்டாரைப்பெற்றார். இறைவர் சுவேதாரண்யேசுவரர். இறைவி பிரமவித்தியாநாயகி. நடராஜர் வழிபாடும் விசேஷம். சம்பந்தர் 3, அப்பர் 2, சுந்தரர் 1 ஆக பதிகம் ஆறு.

25. திருக்கலிக்காமூர்: இறைவர் சுந்தரேசுவரர். இறைவி அழகம்மை. சம்பந்தர்பாடிய பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உள்ளது. அன்னப்பன்பேட்டை என இப்பொழுது தலப்பெயர் வழங்குகிறது.

26. கீழைத்திருக்காட்டுப்பள்ளி: இறைவர் ஆரண்ய சுந்தரர். இறைவி அகிலாண்டநாயகி. சம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார்.

27. திருவலம்புரம்: இறைவர் வலம்புரநாதர். இறைவி வடுவகிர்க்கண்ணி. சம்பந்தர் 1, அப்பர் 2, சுந்தரர் 1. ஆக பதிகம் நான்கு. மேலப்பெரும்பள்ளம் எனப் பெயர் வழங்குகிறது.

28. திருத்தலைச்சங்காடு: இறைவர் சங்கருணாதேஸ் வரர். இறைவி சௌந்தரநாயகி. மாடக்கோயிலில் இதுவும் ஒன்று. சம்பந்தர்பதிகம் பெற்றது. பதிகம் 1.

29. திருகோட்டையூர்: இறைவர் பெயர் கோடீச் சுவரர். இறைவி பந்தாடுநாயகி. அப்பர்பாடிய பதிகம் ஒன்று உள்ளது. தலவிருக்ஷம் ஆமணக்கு.

30. திருவடகுரங்காடுதுறை: வாலிபூசித்த தலமாத லான் 'வாலினூற் கட்டிய வாலியார் வழிபட மன்னு

கோயில்' என்று தேவாரம் பாராட்டுகிறது. இறைவர் குலைவணங்கீசர்; இறைவி அழகு சடைமுடியம்மை; இத் தலத்திற்குச் சம்பந்தர்பதிகம் ஒன்று உள்ளது.

31. திருப்பழனம்: இறைவர் ஆபத்சகாயர்; இறைவி பெரியநாயகி. சப்தஸ்தானத் தலங்களுள் இரண்டாவது. சம்பந்தர் 1, அப்பர் 5, ஆகபதிகம் ஆறு.

32. திருநெய்த்தானம்: இறைவர் நெய்யாடியப்பர். இறைவி பாலாம்பிகை. சப்தஸ்தானத் தலங்களுள் இது ஏழாவது. சம்பந்தர் 1, அப்பர் 5, ஆக பதிகம் ஆறு. வழங்கும்பெயர் தில்லைஸ்தானம்.

33. மேலைத்திருக்காட்டுப்பள்ளி: இறைவர் அக்கினீஸ்வரர். இறைவி சௌந்தரநாயகி. சம்பந்தர் 1, அப்பர் 1, ஆக பதிகம் இரண்டு.

34. திருவாலம்பொழில்: அட்டவசுக்கள் பூசித்த தலம். இறைவர் ஆத்மநாதேஸ்வரர். இறைவி ஞானம்பிகை. அப்பர் அருளிய பதிகம் ஒன்று உள்ளது.

35. திருப்பூந்துருத்தி: சப்தஸ்தானத் தலங்களுள் ஆறாவது இது, அப்பர் திருமடம் கட்டி அதில் சிலநாள் தங்கித் திருத்தொண்டு செய்திருந்தார். அவர் சம்பந்தர் சிவிகையைத் தாங்கியதும் இங்குதான். இறைவர் புஷ்பவன நாதர். இறைவி சௌந்தரநாயகி. 'பண்ணார்ந்த வீணைபயின்றார் போலும்' என்ற பாடற்பகுதிக்கேற்ப, தக்ஷிணாமூர்த்தி கையில் வீணையுடன் விளங்குகின்றார். அப்பர் மூன்று பதிகம் பாடியுள்ளார். இம்மூன்றன்றி மற்றும் பதினைந்துபதிகங்கள் இத்தலத்திலிருந்தேபாடியதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

36. திருக்கண்டியூர்: அட்ட வீரட்டங்களுள் பிரமனின் சிரம் கொய்யப்பட்ட தலம். இறைவர் பெயர் வீரட்டேசுவரர். இறைவி மங்களநாயகி. சப்தஸ்தானத்

தலங்களுள் ஐந்தாவது. சம்பந்தர் 1. அப்பர் 1. ஆக இருபதிகம் பெற்றது.

37. திருச்சோற்றுத்துறை: இறைவர் ஓதனவனேசுவரர். இறைவி அன்னபூரணி. சப்தஸ்தானத் தலங்களுள் மூன்றாவது. கௌதமர் ஆசிரமம். சம்பந்தர் 1. அப்பர் 4. சுந்தரர் 1. ஆக பதிகம் ஆறு.

38. திருவேதிகுடி: வேதம் பூசித்த தலம். சப்தஸ்தானத் தலங்களுள் நான்காவது. இறைவன் வேதபுரீசுவரர். இறைவி மங்கையர்க்கரசி. சம்பந்தர் 1. அப்பர் 1, ஆக பதிகம் இரண்டு.

39. திருவையாறு: இறைவர் செம்பொற்சோதியார். இறைவி அறம்வளர்த்த நாயகி. சப்தஸ்தானத் தலங்களுள் முதலாவது இது. அப்பருக்குக் கயிலைக் காட்சி அருளியது. சுந்தரருக்குக் காவிரி வழிவிலகியது. தருமபுர ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டது. சம்பந்தர் 5, அப்பர் 12, சுந்தரர் 1, ஆக பதிகம் 18.

40. திருநின்றியூர்: இறைவர் லட்சுமிநாதர். இறைவி உலகநாயகி. தருமபுர ஆதீனத்துக்கு உட்பட்டது. இலக்குமி பூசித்த தலம். சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 2, ஆக பதிகம் நான்கு.

41. திருக்கண்ணார்கோயில்: இது இந்திரன் பூசித்த தலம். இறைவர் கண்ணாயிரநாதர். இறைவி முருகுவளர் கோதை. சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று இத்தலத்திற்குள்ளது. குருமாணக்குடி என வழங்குகிறது,

42. திருப்புன்கூர்: இது திருநாளைப் போவாருக்கு நந்தி விலகிய தலம். ஏயர்கோன் கலிக்காமர் திருப்பணி செய்தது. இறைவர் பெயர் சிவலோகநாதர். இறைவி சௌந்தரநாயகி. சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 1, ஆக பதிகம் மூன்று.

43. திருக்கருப்பறியலூர்: தருமபுர ஆதீனத்தின் ஆளுகைக்கு உட்பட்டது, இறைவர் குற்றம்பொறுத்த நாதர். இறைவி கோல்வளையம்மை. மேலைக்காழி என்ற பெயரும் உண்டு. தலைஞாயிறுஎன இப்பொழுது வழங்குகிறது, சம்பந்தர் 1, சுந்தரர் 1, ஆக பதிகம் இரண்டு.

44. திருப்பழமண்ணிப்படிக்கரை: திருவாவடுதுறை ஆதீன நிர்வாகத்துக்கு உட்பட்டது. இறைவர் நீலகண்டர். இறைவி அமிர்தகரவல்லி. சுந்தரர் பதிகம் ஒன்று உள்ளது. இலுப்பைப்பட்டு என இப்பொழுது வழங்குகிறது.

45. திருவாழ்கொளிபுத்தூர்: இறைவர் மாணிக்க வண்ணர். இறைவி வண்டமர் பூங்குழலி. சம்பந்தர் 2, சுந்தரர் 1, ஆக மூன்று பதிகம்பெற்றது. திருவாளபுத்தூர் என வழங்குகிறது.

46. திருக்குறுக்கை: அட்டவீரட்டங்களுள் காமனை எரித்த தலம். இறைவர் வீரட்டேஸ்வரர். இறைவி ஞானம்பாள். அப்பர் பதிகம் 2 பெற்றது. தருமபுர ஆதீன நிர்வாகத்திற்கு உட்பட்டது. மன்மதன் இரதி இவர்கள் திருவுருவங்கள் உற்சவத்திருமேனியாக இங்கு உள்ளன.

47. திருநீடூர்: முனையடுவார் அவதார ஸ்தலம். நண்டு பூசித்த தலம், இறைவர் அருட்சோமநாதர் இறைவி வேயுறுதோளியம்மை. சுந்தரர் ஒரு திருப்பதிகம் பாடியுள்ளார்.

48. திருக்கடைமுடி: இறைவர் பெயர் கடைமுடிநாதேஸ்வரர். இறைவி அபிராமி. பிரமன் பூசித்தது. சம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்று உள்ளது. கீழையூர் அல்லது கீழூர்என இப்பொழுது வழங்குகிறது.

49. திருவிடைமருதூர்: திருவாவடுதுறை ஆதீன நிர்வாகத்தில் விளங்குவது. இறைவர் மகாலிங்கேசர்.

இறைவி நன்முலைநாயகி. இவ்வாலயத்தின் ஒருபகுதியாகிய பிச்சக்கட்டளைமட்டும் தருமபுர ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டிருக்கிறது. பட்டினத்தார், பத்திரகிரியார், வழிபட்டது. வரகுணனுக்குப் பிரமகத்தி நீக்கியது. சம்பந்தர் 6, அப்பர் 5, சுந்தரர் 1, ஆக பதிகம் 12.

50. திருவியலூர்: இறைவர் சிவயோகநாதர். இறைவி சவுந்தரநாயகி. திருவிசலூர்என இப்பொழுது வழங்கப்படுகிறது. உய்யவந்ததேவர் வசித்த தலமும் இதுவே. சம்பந்தர் பாடிய பதிகம் ஒன்றுள்ளது.

51. திருந்துதேவன்குடி: இறைவன் கர்க்கடகேசுவரர். இறைவி அபூர்வநாயகி. நண்டு பூசித்த தலம். சம்பந்தர் ஒரேபதிகம் பாடியுள்ளார். நண்டூர் என்ற பெயரும் வழங்கப்படுகிறது.

52. திருமங்கலக்குடி: இறைவர் புராணேசுவரர். இறைவி மங்களநாயகி. மாகாளி, திருமால், பிரமன், அகத்தியர் ஆகியோர் பூசித்த தலம். சம்பந்தர் 1, அப்பர் 1, ஆக பதிகம் இரண்டு உள்ளன. இது திருவாவடுதுறை ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டது.

53. திருக்கஞ்சனூர்: இறைவர் அக்னீசுவரர். இறைவி கற்பகநாயகி. சிவபரத்துவம் சொல்லிச் சைவஸ்தாபனம் செய்த ஸ்ரீ அரதத்தாசாரியார் அவதாரஸ்தலம். அப்பர் அருளிச்செய்த திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்று மட்டும் உள்ளது. மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்திற்குட்பட்டது.

54. திருக்கோடிகா: இறைவர் பெயர் கோடிகாவீஸ்வரர். இறைவி வடிவம்மை. மூன்றுகோடி முனிவர்கள் பூசித்ததலம். சம்பந்தர் 1, அப்பர் 3, ஆக பதிகம் நான்கு. திருக்கொடிக்காவல் என வழங்குகிறது.

55. திருவழுந்தூர்: தேரழுந்தூர் என இப்போது வழங்குகிறது. இறைவர் வேதபுரீஸ்வரர். இறைவி

சௌந்தரநாயகி. சம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது. திக்குப்பாலகர்கள், அகஸ்தியர் ஆகியோர் பூசித்துப் பேறுபெற்றது.

56. திருப்பனந்தாள்: ஆலயத்தின் பெயர் தாடகேச்சரம். குங்குலியக்கலயர் அன்புக்கயிற்றால் சிவலிங்கத்தை நிமிர்த்த தலம். இறைவர் செஞ்சடையப்பர். இறைவி பெரியநாயகி. சம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது. தருமபுர ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்டது.

57. திருவாப்பாடி: சண்டேசுவரர் மணலாலிங்கம் அமைத்து வழிபட்ட தலம். இறைவர் பாலுகந்தநாதர். இறைவி பெரியநாயகி. அப்பர் அருளிய திருநேரிசைப் பதிகம் ஒன்று உள்ளது.

58. திருச்சேய்ஞலூர்: முருகன் வழிபட்ட தலம். சண்டேசுவரர் அவதாரத்தலமும் இதுவே. இறைவர் சத்தியகிரீசுவரர் இறைவி சகிதேவி. சம்பந்தர் பதிகம் ஒன்றுள்ளது.

59. திருப்புறம்பயம்: மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன நிர்வாகத்திலுள்ளது. இறைவர் சாட்சிநாதர். இறைவி கரும்படுசொல்லியம்மை. விநாயகர் பிரளயங் காத்தபிள்ளையார். ஆண்டிற்கு ஒருமுறை 64 சேர் தேனபிஷேகிக்கப்படும் இவருக்கு. சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 1, ஆக பதிகங்கள் மூன்று.

60. திருவைகாவூர்: இறைவர் வில்வநாதர். இறைவி சர்வஜனரக்ஷகி. சம்பந்தர் பதிகம் ஒன்று இத்தலத்திற்குள்ளது.

61. திருவிசயமங்கை: இறைவர் விஜயநாதேசுவரர். இறைவி மங்களநாயகி. அருச்சுனன் பூசித்தது. சம்பந்தர் 1, அப்பர் 1, ஆக இரண்டு பதிகம் பெற்றது.

51

62. திருஇன்னம்பர்: இறைவர் அக்ஷரபுரீசுவரர். இறைவி பூங்குழலம்மை. இறைவர் கணக்குப்பிள்ளையாக அரசனுக்குக் கணக்குக் காட்டினர் என்பது வரலாறு. சம்பந்தர் 1, அப்பர் 4, ஆகபதிகம் ஐந்து.

63. திருக்குடமூக்கு: சம்பந்தர் 1, அப்பர் 1, ஆக இரண்டுபதிகங்கள் உள்ளன. இறைவர் கும்பேஸ்வரர். இறைவி மங்களாம்பிகை. இலிங்கத்தின் மீது குடமூக்குப் போல் வாய் அமைந்திருக்கிறது. இத்தலஆலயம் கும்பகோணத்திலுள்ள கும்பேசுவரர் ஆலயத்தைக் குறிப்பதாகும்.

64. திருக்குடந்தைக்காரோணம்: இறைவர் காசிவிசுவநாதர். இறைவி விசாலாக்ஷி. திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய தக்கேசிப் பதிகம் ஒன்று உள்ளது.

65. திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்: அப்பர் அருளிச்செய்த திருத்தாண்டகப் பதிகம் ஒன்று இத்தலத்திற்குள்ளது. இறைவர் நாகேஸ்வரர். இறைவி பெரியநாயகி. சூரியன் பூசித்ததலம். நாகேசுர சுவாமி கோயில் என்பதே இவ்வாலயம்.

66. திருப்பட்டீச்சுரம்: இறைவர் பட்டீஸ்வரர். இறைவி ஞானம்பிகை. ஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு முத்துப்பந்தல் அளித்தபெருமான் இவரே. சம்பந்தர் பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உள்ளது.

67. திருப்பழயாறைவடதளி: அமர்நீதிநாயனர் அவதாரஸ்தலம். அப்பர் உண்ணுவிரதம் இருந்து பெருமான் திருவுருவத்தைத் தரிசித்து வணங்கினர். இறைவர் தருமபுரீசுவரர். இறைவி விமலநாயகி. காமதேனு புதல்வி விமலி பூசித்ததலம். அப்பர் பதிகம் ஒன்று உள்ளது.

68. திருச்சத்திமுற்றம்: சத்திபூசித்து முத்தமிட்ட ஸ்தலம். இறைவர் சிவக்கொழுந்துநாதர். இறைவி

பெரியநாயகி. அப்பர் திருவடிசூட்டியருள வேண்டிய தலம். அவர் அருளிச்செய்த பதிகம் ஒன்று உள்ளது.

69. திருவலஞ்சுழி: இறைவர் கபர்த்தீஸ்வரர். இறைவி பெரியநாயகி. விநாயகர் விசேடம். காவிரி வலமாகச் சுழித்துக்கொண்டு பூமியுட்புகுந்த தலம். சம்பந்தர் 3, அப்பர் 2, ஆகபதிகம் ஐந்து.

70. திருநல்லூர்: திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தது. இறைவர் கல்யாணசுந்தரர். இறைவி கல்யாண சுந்தரி. பிருங்கி முனிவர் வண்டுவடிவத்துடன் பூசித்தது. அப்பர் திருவடிதீக்ஷை பெற்றது இங்குதான். அமர்நீதி நாயனர் திருமடம்கட்டி அமுது அளித்ததலம். மாடக்கோயில். சம்பந்தர் 3, அப்பர் 2, ஆக பதிகம் ஐந்து.

71. திருஆவூர்ப்பசுபதீச்சரம்: பசுக்குழாம் பூசித்த தலம். இறைவர் பசுபதீஸ்வரர். இறைவி மங்களநாயகி. சம்பந்தர்பதிகம் ஒன்று உள்ளது.

72. திருக்கருகாவூர்: இறைவர் மாதவிவனேஸ்வரர். இறைவி கர்ப்பரக்ஷாம்பிகை. சம்பந்தர் 1, அப்பர் 1, ஆகபதிகம் இரண்டு.

73. திருப்பாலைத்துறை: இறைவர் பாலைவனநாதர். இறைவி தவளாம்பிகை. அப்பர் அருளிச்செய்த குறுந் தொகைப்பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உள்ளது.

74. திருப்புகலூர்: அப்பர் முத்தியடைந்ததலம். இறைவர் அக்னீசுவரர். இறைவி கருந்தார்குழலி. முருகநாயனர் அவதாரஸ்தலம். சம்பந்தர் 2, அப்பர் 5, சுந்தரர் 1, ஆக பதிகம் எட்டு.

75. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்: இறைவர் வர்த்தமானீசர். இறைவி மனேன்மணி. சம்பந்தர்

பதிகம் ஒன்று உள்ளது. முருகநாயனார் ஆத்மார்த்த மூர்த்தியாகக்கொண்டு வழிபட்டதலம் இதுவே.

76. திருச்சாத்தமங்கை: கோயில்பெயர் அயவந்தி என்பது. திருநீலநக்கநாயனாருக்கு அருள்பாலித்த தலம். சீயாத்தமங்கை என்பது இப்போது வழங்கும் பெயர். இறைவர் பிர்மபுரீசுவரர். இறைவி இருமலர்க்கண்ணி. சம்பந்தர்பதிகம் ஒன்று உள்ளது.

77. திருமருகல்: மாடக்கோயில், இறைவர் ரத்தின கிரீஸ்வரர். இறைவி ஆமோதளநாயகி. விடம்தீண்டி யிறந்த வணிகனைச் சம்பந்தர் பதிகம்பாடிப் பிழைப் பித்தஇடம். சம்பந்தர் 2, அப்பர் 1, ஆகபதிகம் மூன்று.

78. திருச்செங்காட்டங்குடி: சிறுத்தொண்டர் சிறப்படைந்த தலம். கோயிலின்பெயர் கணபதீச்சரம், கணபதி வாதாபிகணபதி எனப்படுவர். இறைவர் கணபதீஸ்வரர். இறைவி திருக்குழல்நாயகி, சம்பந்தர் 2, அப்பர் 1, ஆக பதிகம் மூன்று.

79. திருஇராமனதீச்சுரம்: சம்பந்தர்பதிகம் ஒன்று பெற்ற தலம். இறைவர் இராமநாதர். இறைவி கருவார் குழலம்மை. இராமர்பூசித்த தலம்.

80. திருவாஞ்சியம்: இறைவர் வாஞ்சிலிங்கேசுவரர். இறைவி மங்களநாயகி. சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 1, ஆக பதிகம் மூன்று.

81. திருநன்னிலத்துப்பெருங்கோயில்: இறைவர் மதுவனேசுவரர். இறைவி மதுவனநாயகி. மாடக் கோயில்களில் இதுவும் ஒன்று. பிரமனும் சூரியனும் பூசித்தது. சுந்தரர் ஒருபதிகம் பாடியுள்ளார்.

82. திருக்கொண்டீச்சுரம்: இறைவர்பசுபதீஸ்வரர். இறைவி சாந்தநாயகி. அம்மையார் பசுஉருக்கொண்டு தேடிப்பூசித்தது. அப்பர் இரண்டுபதிகம் பாடியுள்ளார்.

83. திருஅம்பர்மாகாளம்: திருமாளம் எனவழங்குகிறது. இறைவர் மாகாளநாதர். இறைவி பட்சநாயகி. மாகாளிபூசித்தது. சோமாசிமாறநாயனுர் யாகம் செய்த இடம். சம்பந்தர்பாடிய பதிகம் மூன்று.

84. திருஅம்பர்பெருந்திருக்கோயில்: இறைவர் பிர்மபுரீசர். இறைவி சுகந்தகுந்தளாம்பிகை. இதுவும் மாடக்கோயில். சம்பந்தர்பாடிய பதிகம் ஒன்று உள்ளது.

85. திருமீயச்சூர்: இறைவர் மேகநாதர். இறைவி சாந்தநாயகி. சூரியபூஜை விசேஷம். இதற்கும் சம்பந்தர் பதிகம் ஒன்றேயுள்ளது.

86. திருமீயச்சூர் இளங்கோயில்: இறைவர் சகல புவனேஸ்வரர். இறைவி மின்னுமேகலையாள். அப்பர் இத்தலத்தைப்பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார்.

87. திருவீழிமிழலை: இறைவர் வீழிநாதர். இறைவி சுந்தரகுஜாம்பாள். திருமாலுக்குச் சக்கரம் அருளிய தலம். அப்பரும், சம்பந்தரும் திருமடம்கட்டிப் படிக்காசு பெற்று அடியார்க்கு அமுதளித்தது இங்குதான். சம்பந்தர் 14, அப்பர் 8, சுந்தரர் 1 ஆக பதிகம் இருபத்து மூன்று. விநாயகர் படிக்காசு விநாயகர்.

88. திருவன்னியூர்: இறைவர் அக்னீசுவரர். இறைவி பார்வதியம்மை. அப்பர் அருளிய திருப்பதிகம் ஒன்று இத்தலத்திற்கு உள்ளது.

89. திருப்பேணுபெருந்துறை: இறைவர் பிரணவேசுவரர். இறைவி மங்களநாயகி. சம்பந்தர் தேவாரத்தில் ஒருபதிகம் காணப்படுகிறது. திருப்பத்துறைஎன வழங்குகிறது.

90. திருநறையூர்ச்சித்தீச்சரம்: இறைவர் சித்தநாதர். இறைவி அழகாம்பிகை. சம்பந்தர் 3, சுந்தரர் 1

ஆக நான்கு பதிகம் பெற்றது. நாச்சியார்கோயில் என வழங்குகிறது.

91. திருஅரிசிற்கரைப்புத்தூர்: இறைவர் படிக்காசு நாதர். இறைவி அழகம்மை. புகழ்த்துணைநாயனருக்கு அருள்பாலித்த தலம். அழகாபுத்தூர் என்று தலப் பெயர் வழங்கப்படுகிறது.

92. திருச்சேறை: இறைவர் செந்நெறியப்பர். இறைவி பரமேஸ்வரி. இப்பொழுது உடையார்கோவில் என்று வழங்கப்படும் தலம். சம்பந்தர் 1, அப்பர் 2 ஆக பதிகம் மூன்று.

93. திருநாலூர்மயானம்: இப்பொழுது வழங்கும் பெயர் நாத்தூர். ஆபஸ்தம்பர் பூசித்ததலம். இறைவர் பலாசவனநாதர். இறைவி பெரியநாயகி. இதுவும் மாடக் கோயில், சம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது.

94. திருக்குடவாயில்: இறைவர் கோணேஸ்வரர். இறைவி பெரியநாயகி. சம்பந்தர்பதிகம் இரண்டு.

95. திருக்கோலக்கா: சம்பந்தருக்குப் பொற்றாளம் அருளிய தலம். இறைவர் தாளபுரீஸ்வரர். இறைவி ஓசைகொடுத்தநாயகி. சம்பந்தர் 1, சுந்தரர் 1 ஆக பதிகம் இரண்டு. திருதாளமுடையார் கோயில் என இப்பொழுது வழங்குகிறது.

96. தென்திருமுல்லைவாயில்: கடற்கரைத்தலம். இறைவர் முல்லைவனநாதர். இறைவி அணிகொண்ட கோதை. தருமபுர ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்டது. சம்பந்தர் ஒருபதிகம் பாடியுள்ளார்.

97. திருவாரூர்ப்பரவையுண்மண்டளி: திருவாரூர் கீழவீதியிலுள்ள கோயில். இறைவர் தூவாயார். இறைவி வண்டமர்பூங்குழலாள். துர்வாசர் பூசித்தது. சுந்தரர் பதிகம் ஒன்று உள்ளது.

98. திருவாரூர்: கோயிலின்பெயர் பூங்கோயில். இறைவர் வன்மீகநாதர். இறைவி நீலோத்பலாம்பாள். சுந்தரர் வரலாற்றில் பெருந்தொடர்புடையது இத்தலம். தண்டியடிகள், ஆகியோர் பேறுபெற்றது. சம்பந்தர் 5, அப்பர் 21, சுந்தரர் 8, ஆகபதிகம் முப்பத்துநான்கு. இதன் ஒருபகுதியாகிய இராஜன்கட்டளை நிர்வாகம் தருமபுர ஆதீனத்தில் நிர்வகிக்கப்படுகிறது. விடங்கத் தலங்களுள் முதன்மையானது. சோமாஸ்கந்தர் விசேட மூர்த்தி. முசுகுந்தார்ச்சனை இங்கு சிறப்பு வாய்ந்தது.

99. திருவாரூர் அரநெறி: இறைவர் அசலேசர். இறைவி புவனேஸ்வரி. நமிநந்தி நீரால் விளக்கெரித்த தலம் இதுவே. அப்பர் பாடிய பதிகம் இரண்டு.

100. திருக்காறாயில்: இறைவர் கண்ணாயிரநாதர். இறைவி கைலாசநாயகி. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்று. சம்பந்தர் பதிகம் ஒன்றுள்ளது.

101. திருக்கைச்சினம்: இறைவர் கரச்சின்னேஸ் வரர். இறைவி வெள்வளையம்மை. இதற்கும் சம்பந்தர் பதிகம் ஒன்று உள்ளது. மதுரையாதீனத்திற்கு உட்பட்டது.

102. திருக்கோளிலி: தருமபுர ஆதீன ஆளுகைக்கு உட்பட்டது. இறைவர் பிரமபுரீசுவரர். இறைவி வண் டமர்பூங்குழலாள். திருக்குவளை என்றுபெயர் வழங்கு கிறது. விடங்கத்தலங்களுள் ஒன்று. சுந்தரர் நெல் எடுக்க ஆள் வேண்டிய தலம். சம்பந்தர் 1, அப்பர் 2, சுந்தரர் 1 ஆக பதிகம் நான்கு.

103. திருவலிவலம்: இறைவர் மனத்துணைநாதர். இறைவி மாழையொண்கண்ணி. இதுவும்மாடக்கோயில். சம்பந்தர் 2, அப்பர் 1, சுந்தரர் 1, ஆக பதிகம் நான்கு பெற்றது.

57



104. திருத்தேவூர்: இறைவர் தேவபுரீஸ்வரர். இறைவி மதுரபாஷிணி. கௌதமர் பூசித்தது. மாடக் கோயில். சம்பந்தர் இரண்டு பதிகம் பாடியுள்ளார். தல விருக்ஷம் வாழை.

105. திருக்கீழ்வேளூர்: இதுவும் மாடக்கோயில். இறைவர் அக்ஷயலிங்கேசுவரர். இறைவி சுந்தர குஜாம்பாள். சம்பந்தரும் அப்பரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார்கள். கீவளூர் என வழங்கப்படுகிறது.

106. திருவேட்டக்குடி: இறைவர் திருமேனியழகர், இறைவி சாந்தநாயகி. அர்ச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் அளித்த தலம். சம்பந்தர் ஒருபதிகம் பாடியுள்ளார்.

107. திருத்தெளிச்சேரி: இறைவர் பார்வதீஸ்வரர். இறைவி சுயம்வரதபஸ்விநி. இதற்கும் சம்பந்தர்பாடிய பதிகம் ஒன்றுள்ளது. காரைக்கோவிற்பத்து என இப்போது வழங்கப்பெறுகிறது.

108. திருநள்ளாறு: விடங்கத்தலங்களுள் இதுவும் ஒன்று. நளன்வழிபட்ட தலம். சனிபகவான்வழிபாடு இங்குச்சிறப்பு. இத் தலப்பதிகத்தை எழுதி மதுரை அனல்வாதத்தில் தீயில்போட்டுப் பரிசோதிக்க ஏடு வேகாதிருந்தமையால் 'போகமார்த்த' என்று தொடங்கும் இத்தலப்பதிகம் பச்சைப்பதிகம் என வழங்கப் படுகிறது. இறைவர் தர்ப்பாரண்யேசுரர். இறைவி போகமார்த்தபூண்முலையம்மை. சம்பந்தர் 4, அப்பர் 2, சுந்தரர் 1 ஆக பதிகம் ஏழு. தருமபுர ஆதீன ஆளுகைக் குட்பட்டது.

109. திருத்தருமபுரம்: இது காரைக்கால்தருமபுரம் எனவழங்கும். இதுவும் தருமபுர ஆதீன நிர்வாகத்திற்குட் பட்டது, இறைவர் யாழ்மூரிநாதர், இறைவி தேனமிர்த வல்லி, யாழ்ப்பாணரின் யாழில் அடங்காத யாழ்மூரிப் பண் இத்தலத்தில் பாடப்பட்டது. பாடியவர் சம்பந்தர்,

5 8

இந்த ஒருபதிகத்தைத்தவிர வேறுபதிகம் இத்தலத்திற்குக் காணப்படவில்லை, சம்பந்தர் தேவாரத்தில் முதல் திருமுறை இத்தலத்தேவாரத்துடன் நிறைவேறுகிறது,

பதிகம்பெறாத இதரதலங்கள்:

திருபுவனம்: இறைவர் கம்பகரேசுவரர். இறைவி தர்மசம்வர்த்தனி, இங்கு ஸ்ரீ சரபமூர்த்தி வழிபாடு மிகச் சிறந்தது. வேறு எத்தலத்தும் காணப்படாத மூர்த்தி. வரகுணபாண்டியனுக்குத் திருவிடைமருதூரில் பிரமஹத்தி தோஷம் நீங்கினாலும் அதன் நடுக்கம் நீங்கியது இங்கேதான். தருமபுர ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டது.

திருமூவலூர்: வைப்புத் தலங்களுள் இதுவும் ஒன்று. இறைவர் மார்க்கசகாயர். இறைவி மங்கள நாயகி.

சுவாமிமலை: சுப்பிரமணிய ஸ்தலம், அருணகிரியார் திருப்புகழ் பெற்றது. இறைவர் சுந்தரேஸ்வரர், இறைவி மீனாட்சி. முருகன் திருநாமம் சுவாமிநாதன்,

காசிவிசுவநாதசுவாமிகோயில்: இது தருமபுர ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டது. மாயூரம் தலாக்கட்டத்தில் விளங்கும் ஆலயம் இது. இறைவர் காசிவிசுவநாதர். இறைவி விசாலாக்ஷி. இடபதீர்த்தத்தில்நீராடி இப்பெருமானையும் பெருமாட்டியையும் தரிசித்து இவ்வாலயத்திலேயே சிரார்த்தம் பிண்டதர்ப்பணம் முதலியன செய்வோர் பெரும்பயனைப் பெறுவார்கள். விநாயகர் துண்டி விநாயகர் எனப்படுவர். காசி சொர்ணகால பைரவர், தண்டபாணி முதலிய திருவுருவங்கள் இங்கு உள்ளன.

வள்ளலார்கோயில்: இங்கு தக்ஷிணாமூர்த்தி வழிபாடு மிகச்சிறப்பு. இவர் யோகாசனத்து ஞானமுத்திரைக் கையராக எழுந்தருளி இருக்கின்றார். ஏனைய தக்ஷிணா

மூர்த்தித் திருவுருவத்தைக்காட்டிலும் இந்தமூர்த்திக்குள்ள தனிச்சிறப்பு நந்திபெருமான்மீது ஆரோகணித்திருப்பது. இறைவர் வதான்யேஸ்வரர். இறைவி மங்களநாயகி. மாயூரம் இடபதீர்த்தத்தின் வடபால் இத்தலம் விளங்குகிறது. தருமபுர ஆதீனத்திற்குச்சொந்தமானது.

காரைக்காலம்மையார்கோயில்: இது காரைக்காலில் கயிலாசநாதர் கோயிலின் முன்பு விளங்குகிறது. மாம்பழத் திருவிழா பிரபலமானது.

கயிலாசநாதர்கோயில்: இது காரைக்காலில் விளங்கும் தலம். இறைவர் கயிலாசநாதர். பிக்ஷாடனர் திருக்கோலம் அழகுவாய்ந்தது.

மேற்குறித்த தலங்களில் நாள் ஒன்றுக்கு ஆறு அல்லது ஏழு தலங்கள் வீதம் வழிபாடு முறையே நடைபெற்றது. வழிபாடும் காலை சுமார் 9 மணிக்குள் முடிந்துவிடும். ஆங்காங்கும் அருச்சனை செய்வித்து, ஆதீன ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு தலப்பதிகங்களை ஓதச்செய்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வழிபாடு செய்தருளுவார்கள். ஆராதனையின்போது அருகில் உள்ளவர்களுக்கும், அருச்சகர்களுக்கும் தலப்பதிக வெளியீடுகளை வழங்குவார்கள். சிற்சில இடங்களில் விசேஷ அபிஷேகங்கள் கூட செய்விக்கப்பெற்றன. 2—1—52 ல் குறுக்கையிலும், 3—1—52 ல் பரசலூரிலும், 5—1—52 ல் திருநின்றியூரிலும் பெருமானுக்குப் பஞ்சமுகார்ச்சனை நடத்தப்பெற்றது. ஏழைகளுக்குப் பிரஸாதங்கள் விநியோகிக்கப்பட்டன. 25—12—51 ல் வைத்தீஸ்வரன்கோயிலில் பெருமானுக்குப் பஞ்சமுகார்ச்சனையும், அம்மையாருக்கு நவசத்தி அர்ச்சனையும், முத்துக்குமாரருக்கு சண்முகார்ச்சனையும் சிறப்பாக நடத்தப்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு செய்த முறையில், இதில் தலங்கள் நூற்றென்பதும் வரிசையாகத் தரப்பட்டிருக்கின்றன.

காரைக்கால், காரைக்காலம்மையார் கோயிலில்

5—1—52ல் நிகழ்ந்த உபசாரக்கூட்டத்தில்

# ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம்அவர்கள் அருளுபதேசம்

சைவப்பெருமக்களே! சிவநேயச்செல்வர்களே!!

நாம் இப்பொழுது அம்மையார் ஆலயத்தில் கூடியிருக்கின்றோம். இந்த அம்மையார் உங்கள் ஊரிலே அவதரித்தவர்கள். அவர்களைப்பற்றி நீங்கள் நன்றாகத் தெரிந்திருப்பீர்கள். ஆகவே அவர்களுடையவரலாற்றில் காணும்சில உண்மைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

காரைக்காலம்மையாருக்குத் திருமணம் நிகழ்ந்தது. ஒரு குடிக்கு ஒரே புதல்வியாதலினால் பெற்றோர்கள் இந்தவூரிலேயே தனியாக ஒரு வீடுகட்டிக்கொடுத்துக் கணவனுருடன் இனிதிருந்து இல்லறம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். வருகின்ற அடியார்கட்கு நல்ல அறுசுவை உணவு இடுவார். பொன் கொடுப்பார், நவரத்னங்கள், ஆடைகள் எல்லாம் கொடுத்துவந்தார் நம் காரைக்காலம்மையார். கணவன் பரமதத்தன் பணம் மிகப்படைத்தவனல்லவா. நிதிபதியின் மகன்; உயர்குடிப் பிறப்பு; நடுநிலை தவறாதவன். அவனைப் பார்க்க வருபவர்கள் வெறுங்கையுடனா வருவார்கள்? ஒருவர் இரண்டு மாம்பழத்தைக் கொண்டுவந்து கொடுத்துப் பார்த்துச் சென்றார் ஒரு நாள். பரமதத்தன் அந்த மாம்பழம் இரண்டையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். அம்மையாரும் வாங்கிவைத்துக்கொண்டார். அந்த மாம்பழங்கள் நாம் கடையில் வாங்கும் சாதாரண மாம்பழம் அல்ல. இறையருள் பழுத்தபழம். அந்தப் பழந்தான் அம்மையாரை அருளாளராக ஆக்கிற்று. இன்று நம்மையெல்லாம் அம்மையாரைப்பற்றி நினைக்குமாறு - பேசுமாறு

செய்தது எது? அன்று பரமதத்தன் அம்மையாருக்கு அனுப்பிய அந்த மாம்பழந்தான்.

அன்று சைவமங்கையர்கள் எவ்வளவுபேர் இல்லறத்தில் இருந்துகொண்டே சமயப்பணி செய்திருக்கின்றார்கள் என்பதை நமது பெரியபுராணம் நன்ருகக் காட்டுகிறது. கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டார் என்று கேட்டபொழுதே திலகவதியார் தம் உயிரை நீக்க எண்ணினர். உடன்பிறப்பு தடுத்தது. அனைத்துயிர்க்கும் அருள் தாங்கினர். திருவதிகை வீரட்டானத்தில் சரியைத் தொண்டு செய்து வந்தார். அதுமட்டுமா? தனது தம்பியைப் புறச்சமயச் சூழலினின்றும் விடுவிக்கவேண்டும் என்று நாடோறும் பெருமானிடம் வேண்டினர். பெருமான் சூலைநோய் கொடுத்தார் அப்பருக்கு. அருள்பெறுங்காலம் கிட்டியது. அவரே தமக்கையிருக்குமிடம் தேடிவந்தார். கண்டு வணங்கினர். வணங்கிய அவருக்குத் திலகவதியார் திருநீறு அஞ்செழுத்தோதிக்கொடுத்தார். அப்பர் மீண்டும் சைவத்திற்கு வந்து சமயஸ்தாபனம் செய்தார். அடுத்து மங்கையர்க்கரசியாரை எடுத்துக்கொண்டால் அவரும் அப்படியே. அவர் சோழன்மகளார். பாண்டியரின் மாதேவியார், மதுரை முழுதும் சமண சமயத்தின் பரப்பு, அரசனும் அதில் சிக்குண்டான். தாமும் அமைச்சரும் சைவசமயிகளாகத் திகழ்ந்தார்கள். ஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்துச் சைவஸ்தாபனம் செய்யச் செய்தார்கள். சைவம் நாடெங்கும் பரவியது. அரசரும் சைவராயினர், தந்தை தலையைப் பிடிக்கத் தான் கிண்கிணிக்கால் இரண்டையும் மடியில் வைத்துக்கொண்டு, இரண்டு கைகளையும் தனது ஒரு கையால் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் தனது ஒரே இளைய பாலகனை அறுத்துக் கறி சமைத்தவர் சிறுத்தொண்டரின் மனைவியாரல்லவா? இதுபோன்ற இன்னும் பல சைவப்பெண்மணிகளை அணிகலமாகக் கொண்டு விளங்கியதுதான் நமது சைவசமயம்.

இனி மாம்பழத்தைப் பார்ப்போம். அம்மையார் வீட்டுக்கு வந்த மாம்பழம் அடியவர் ஒருவரையும் கூட அழைத்து வந்துவிட்டது. அடியவர்க்குப் பசி அதிகம். பொறுக்க முடியவில்லை. கண்டார் அம்மையார்; 'சமையல் முற்றிலும் முடியவில்லையே; அது முடியுமளவும் அடியவர் பசித்திருக்கமாட்டாரே; அடியார்க்கு அமுது அளிப்பது பெரும்பேறல்லவா? அது இப்போது தவறி விடுமோ; தவறிவிட்டால் என் செய்வது என்றெல்லாம் எண்ணினர். உடனே அடியவரை உள்ளே அழைத்துச் சென்றார். ஆசனத்திலமர்த்தித் திருவமுதை இலையில் படைத்தார். கணவனர் அனுப்பிய மாங்கனியில் ஒன்றைக் கொண்டுவந்து இட்டார். பசியால்வாடிய தொண்டர் அப்பழத்தின் துணைகொண்டு திருவமுதை உண்டுசென்றனர். பின்னர் அம்மையார் பாக்கியுள்ள காய்கறிகளையும் நன்றாகச் சமைத்து வைத்துவிட்டுக் கணவனரை எதிர்நோக்கியிருந்தார்.

கணவனர்வந்தார். நீராடினர். நித்யகடன் முடித்து உணவருந்தத்தலைப்பட்டார். அம்மையாரும் இலையில் அமுது கறிவகைகள் எல்லாவற்றையும் படைத்தார். மீதி இருந்தமாங்கனி ஒன்றையும் கொண்டுவந்து வைத்தார். கனியின் சுவை அறிந்த கணவன் மற்றொன்றையும் கொண்டுவா என்ருன். அம்மையாரும் எடுப்பவர்போல் உள்சென்றார். இறையருள்பெற்றார்க்கு எட்டாதது எது? இறைவன் திருவடியை எண்ணினர். கையில்வந்திருந்தது கனி. அதுதான் அதிமதுரக்கனி. 'புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே' என்றுரே அப்பர் அடிகள். 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை' என்றார் மற்றொருவர். அத்தகைய இனிய சிவக்கனிதந்த கனியல்லவா இந்த ம்மாம்பழக்கனி. கனியுண்ட கணவன் சுவை முதிர்ச்சியால் இது தான் கொடுத்த கனியன்று என எண்ணினன். மனைவியிடம் கேட்டு உண்மையறிந்து கொண்டான். அது உண்மையா என்பதை அறிய ஆசைப்பட்டான். அப்படியானல்

மற்றொரு கனிகொண்டுவா பார்ப்போம் என்றவுடன் அப்படியே உள்ளே சென்று திருவருள் தந்த மற்றொரு கனியையும் கொண்டுவந்து கொடுத்தார் அம்மையார். கணவன் கைநீட்டி வாங்கினன். ஆனல் உடனே அது மறைந்துவிட்டது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லை. அன்று முதல் அவன் அம்மையாரைத் தெய்வ மாகவே கருதினன்.

அம்மையாரும் பின்னர் பேய்வடிவு வேண்டிப் பெற்ருர். அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை முதலிய பல அருணூல்களைப் பாடுகின்ருர். முதலில் எடுத்தஉடனே என்னசொல்கிருர். பெருமானே! விடம் உண்டு தேவராதியோர்களைக் காப்பாற்றிய இறைவா! நான் பிறந்ததுமுதல் — பிறந்து பேசத்தொடங்கியது முதல் உனது திருவடியைத்தானே இடையருது சிந்தித்துக்கொண்டிருந்தேன். சிந்திக்கின்ற என்னுடைய துன்பத்தைத் தீர்த்து ரக்ஷிப்பது எப்பொழுது? என்று கேட்கிருர்:—

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறம்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்ப்ப(து) இடர்?

மக்கள் இடர் வந்தபோதுதானே இறைவனை ஏத்து வார்கள். வழிபடுவார்கள். அதுதானே நாம் இப் பொழுது உலகில்காண்பது. இதுகூடாது. எப்பொழுதும் வழிபாடுசெய்யவேண்டும். ஒன்றைவிரும்பி அது தீரும் மட்டும்செய்து பின் விட்டுவிடுதல் கூடாது என்பதை மற்றொரு பாடலில் கூறுகின்ருர். இறைவன் துன் பத்தை நீக்கினுலும்சரி நீக்காவிட்டாலும்சரி; என் நெஞ்சு எப்பொழுதும் அவருக்கு அடிமையே. சிறி தளவுகூட அன்பில் குறையாது என்கிருர்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்னெஞ்சு அவர்க்கு.

இந்த உறைப்பு அம்மையாருக்குக் கடைசிவரையில் இருந்திருக்கிறது.

வடதேசங்களையெல்லாம்கடந்துசென்ற அம்மையார் கயிலைக்கு அருகில் சென்றார். கயிலையில் காலினால் நடப்பது கூடாது என எண்ணி அங்கிருந்து தலையால் நடந்து சென்றார். இறைவனை அணமினார். அம்மையே என்று அழைத்தனர் இறைவர். கேட்ட அம்மையாரும் அப்பா என்றுசொல்லிப் பன்முறைவீழ்ந்து வணங்கினர். அப்பொழுது ஒருவரம் வேண்டுகின்றார், யார்? "அன்பறாது என்னெஞ்சு அவர்க்கு" என்றுபாடிய நமது காரைக்காலம்மையார்.

இனி வரத்தைப் பார்ப்போம். என்ன வரம்? பொருள் கேட்கின்றாரா? அல்லது உயர்ந்த பதவிதான் கேட்கின்றாரா? எதையுமே அவர் விரும்பவில்லை. இவைகள் அழியும் தரத்தன. அன்பறாது என்னெஞ்சு என்றாரல்லவா! அன்புதான் அவரால் வேண்டப்படும் பொருள். அன்பும் இன்ப அன்பு. அத்துடன் நின்றாரா? இல்லை. மேலும் கேட்கின்றார். பிறவி என்பது பெரிய கடலல்லவா? 'தமியனேன் பெரும் பிறவிப் பௌவத்து' 'பிறவி எனும் பொல்லாப் பெருங்கடல்' 'பிறவிப் பெருங்கடல்' என்றெல்லாம் பெரியோர்கள் பேசியிருக்கின்றார்கள். நல்ல சிவதருமம்; சிவயோகம்; சிவஞானம் மூன்றும் நிறைவுற்றாலல்லது இறவாத இன்ப அன்பு வாராதல்லவா? அவைகளை முற்றுவித்தற்கு மீண்டும் பிறவி ஏற்படுமானல் என் செய்வது? நற்கணமாகிய பேய்க்கணத்தை விடவேண்டுமே. இப்பிறவி தப்பினல் எப்பிறவி வாய்க்குமோ? யான் அறிமேன்

ஆதலால் பிறவாமை வேண்டும் என்கிறார். ஒரு வேளை நல்ல பிறவியை எடுத்தாலும் அப்பொழுதும் 'உம்மை மறவாமை வேண்டும்' என்கிறார் அடுத்த வரமாக. அப்பர் பெருமானும் இதற்குத்தானே உள்ளம் கவல்கின்றார்.

துறக்கப்படாத உடலைத் துறந்து வெந்தூதுவரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும்பு ஏறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணிவார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோ என்று என்னுள்ளம் மறுகிடுமே.

அம்மையார் இத்துடன் வரத்தை நிறுத்திக்கொண்டாரா? இல்லை. மேலும் சிந்திக்கின்றார். நாம் ஒருகால் பிறவி எடுக்கலாம். இறைவனை மறவாமலும் சிந்திக்கலாம். ஆனால் இப்பொழுது உன்னைக் காணும் பேறு கிடைத்ததுபோல அப்பொழுதும் கிடைக்குமா? கிடைக்குமானால் அதுவரையில் எவ்வாறு ஆற்றியிருப்பேன். ஆனந்தக் கூத்தை எவ்வாறு அகன்று செல்வேன். வேண்டுவது யாது என்று நீர்தானே இப்பொழுது கேட்டீர். ஆகவே இப்பொழுது 'அறக் கடவுளே! நீ நடனம் ஆடும்போது உன் திருவடியின் கீழிருந்து எப்பொழுதும் தரிசனம் செய்துகொண்டிருக்க வேண்டும் இதுதான் எனது வேண்டுகோள்' என்று முடிக்கின்றார்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உம்மை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

இத்தகைய பெரும்பேறு பெற்றவர் இந்த ஊரிலே அவதரித்த அம்மையார், அம்மையாரை "அம்மையே" என்றார் இறைவன். 'தாயிற்சிறந்த தயாவான தத்துவன்' என்கிறார் மணிவாசகர். ஏன் அம்மையே என்றார்?

இதைச்சேக்கிழார் நன்கு அறிவிக்கிருர். அம்மையார் அடியார்களை உபசரிப்பதில் தாய்போல் இருந்தாரல்லவா! "தாயோடு அறுசுவைபோம்" என்ருர் ஒருவர். அப்படி உபசரித்ததால்தானே அம்மையே என்று அழைக்கப் பெற்ருர். ஆகவே உலகினர்யாவரும் இத்தத்துவத்தை நன்குணரவேண்டும். உணர்ந்து அடியார்களிடத்து அன்பு கொள்ளவேண்டும். அன்போடு தாய்போல் உபசரிக்க வேண்டும். அவ்வாறு உபசரித்தால் அம்மையே என்றழைக்கும் பேற்றை ஏனையோர்களும் பெறலாம் அல்லவா. ஆகவே உலகம் உய்யவேண்டும். உய்ய எழுந்த அந்த ஒரு மொழிதான் செம்மைமொழி என்பதை அறிவிக்கின்ருர் நம் தெய்வப்புலவர்.

"......அம்மையே! என்னும் செம்மை
ஒருமொழி உலகமெல்லாம் உய்யவே அருளிச்செய்தார்"

இவ்வாறு அப்பன் அருளிய செம்மை மொழியை நீங்கள் எவ்வாறு போற்றவேண்டும். போற்றும் பேறு உங்கட்குக் கிடைத்திருக்கிறது. ஆதலின் அம்மையே என்ற அந்த செம்மைமொழிதான் ஸ்ரீ பஞ்சாக்ஷரம். அதுதானே ஒரு மொழி என்று சிறப்பிக்கப்படுவது. அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்திஞல் அதன் பயன் அளவிடமுடியாததொன்று. 'சிவாயநம என்று சிந்தித் திருப்போர்க்கு, அபாயம் ஒருநாளும் இல்லை' என்ருர் நம் தமிழ் மூதாட்டியார். முன்னோர் வழி ஒழுகுதல்தானே பின்னோரது கடமை.

பெறுதற்கரிய பிறவி மானுடப்பிறவி. இப்பிறவி எடுப்பது கடலைக் கையால் நீந்துவது போலத்தான். அத்தகைய பிறவியை இப்பொழுது பெற்றுவிட்டோம். பெற்றதன் பயன் யாது? சிறிது சிந்திக்கவேண்டும். உண்பதுவும், உடுப்பதுவும், பூசுலதுவும் உயர் பதவி பெறுவதுவும்தான் நாம் செய்யவேண்டிய வேலைகள் என்று எண்ணிக்கொண்டிருத்தல் கூடா. இதனல்

அடையும்பயன் உடலைப்பற்றியதே. 'உடலார் அழியின் உயிரார் அழிவர்' என்பது மந்திரம். உடலுள்ளபோதே உயிர்ப்பயனைத் தேடிவைத்துக் கொள்ளவேண்டும். தரித்திரனுக்கு மாணிக்கம் கிடைத்தால் அவன் எவ்வாறு போற்றுவான். அதைவிட அதிகமாகவேபோற்றிக் கொள்ளவேண்டும். உயிர்ப்பயனை அடையும்வழிதான் இறைவழிபாடு. மானுடப்பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காயம் ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ? ஆகவே இறைவழிபாடு மக்களுக்கு இன்றியமையாதது. ஆதலினல்தான் அப்பர் சுவாமிகள் தில்லையில் தரிசனம் செய்கின்றபோது குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், குமிண்சிரிப்பு, பனித்தசடை, பவளமேனி, எடுத்த பாதம் இவை காணப்பெறுவது தான் மனிதப்பிறவியின்பயன்; அப்படிக்காணவிட்டால் அவர்கள் பிறவி எடுத்ததன் பயனைப் பெறாதவர்களே என்ற கருத்தில்,

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே.

என்று பாடுகின்றார். இவ்வாறு புறக்காட்சியாகக்கண்டவரே அடுத்து அகக்காட்சியாகவும் காண்கின்றார். பெருமானுடைய எளிவந்த தன்மையினையும், தனது தாழ்ச்சியினையும் எண்ணி வியக்கின்றார். அவர் கண்ட காட்சியை நமக்குக் காட்டுகின்றார் பாருங்கள். திருமுடியில் ஊமத்தமலர்; மூன்றுகண்; புன்முறுவல்; திருக்கரத்தில் உடுக்கை; திருமேனியெங்கும் திருவெண்ணீறு; ஒருபாகத்தில் அம்மையார்; இடையில் புலித்தோலாடை; இவ்வாறு தான்கண்ட இன்பக்காட்சியை யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றமுறையில் நமக்குக் காட்டிக் காணச்செய்கின்றார்.

முடிகொண்ட மத்தமும் முக்கண்ணி நோக்கும் முறுவலிப்பும்
துடிகொண்ட கையும் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும் என்பாவிநெஞ்சில்
குடிகொண்டவா தில்லை அம்பலக்கூத்தன் குரைகழலே.

தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தர்களை எடுத்துக் கொள்ளுங்கள். சோழர்களில் கோச்செங்கட்சோழர் செய்த திருப்பணிகள் ஆலயங்களில் எங்குபார்த்தாலும் காணப்படுகின்றன. புகழ்ச்சோழர், தமது வீரர்களால் கொய்துகொண்டுவரப்பட்ட தலைகளில் ஒன்று சடையோடு இருந்தலைக்கண்டு, நடுங்கித் தீயில் மூழ்கினர். பாண்டியரில் நின்றசீர் நெடுமாறர். பல்லவர்களை எடுத்துக்கொண்டால் கழற்சிங்கர், ஐயடிகள் காடவர் கோன் ஆகியோர். களப்பிரரில் கூற்றுவர். சிற்றரசர் களில் மெய்ப்பொருள்நாயனர், நரசிங்கமுனையரையர், பெருமிழலைக்குறும்பர், இடங்கழியார். இப்படி இவர்கள் செய்த அருஞ்செயல்கள் பெரியபுராணத்தில் விளக்க மாகப் பேசப்படுகின்றன. இன்னும் சரித்திர உலகில் புகுந்தால், கல்வெட்டைப் புரட்டிப்பார்த்தால் பல மன்னர்கள் காணப்பெறுவார்கள். அவர்கள் செய்த ஆலயத் திருப்பணிகளும், கட்டிய கோயில்களும், கோயில் காரியங்கள் ஒழுங்காக முட்டுப்பாடின்றி நடக்க ஏற்பாடு செய்த வகைகளும் எண்ணில் அடங்கா, எழுத ஏடுகளும் போதா.

சேர அரசர்களில் சேரமான் பெருமாள் வரலாறு சிந்திக்கத்தக்கது. உலகியல்பும் அரசியல்பும் உறுதி யல்ல என உணர்ந்தவர்; நீடும் உரிமைப் பேரரசால் நிகழும் பயனும், நிறைதவமும், தேடும் பொருளும், பெருந்துணையும் தில்லைப்பெருமான் திருவடியே எனத் தெளிந்த பேரறிவுடையவர்; யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வுடையவர்; நாடோறும் விடியலில் எழுந்து ஆலயஞ்சென்று திருவலகிடுதல் திருமெழுக் கிடுதல் முதலிய தொண்டுகளைத் தமது கையினலே

செய்யும் நியதியுடைய பேரரசர். ஒருநாள் அரசுலாங் தெருவில் யானைமீது செல்லும்போது எதிரே உவர் மண்ணினாலே வெளுத்தஉடலோடு எதிர்வரும் வண்ணானைக் கண்டவுடன் சட்டெனக் கீழிறங்கி, வெண்ணீறு சண்ணித்த சிவனடியார் என்று கருதி, தொழுது வணங்கினார். அவ்வளவு உறைப்பு திருவேடத்தில். இறைவனே தம் கரத்தால் இவருக்குத் திருமுகம் எழுதி அனுப்பினார்; அதுதான் திருமுகப்பாசுரம்.

இவரது பத்திவலையிற் படும் பரமன் நாடோறும் பூஜை முடிந்தவுடன் தனது திருவடிச் சிலம்போசையை உண்டாக்கி இவருக்கு அருள்பாலிப்பது வழக்கம். அந்த வழக்கத்தை ஒருநாள் சிறிது தாமதித்தார் பெருமான். ஏதாவது பூஜையில் சிவாபராதச்செயல் ஏற்பட்டுவிட்டதோ என அஞ்சி உயிர்விடத் துணிந்துவிட்டார் அரசர். அடியார் துன்பம் சகிக்காத இறைவர் வழக்கம்போலச் சிலம்போசையை வெளிப்படுத்தி அருள்பாலித்தார். ஓசை தாழ்த்தமைக்குக் காரணம் இருக்கவேண்டுமே! அதை அவரே சொல்கிறார். தமது தோழர் சுந்தரரை அரசருக்கு அறிமுகப்படுத்த எண்ணினார். இனத்தோடு இனஞ்சேர்வதுபோல அடியாரோடு அடியார்தானே சேரவேண்டும். ஆகவே சுந்தரரையும் சேரமானையும் சேர்த்துவைக்க வேண்டும் என்பது பெருமானுக்கு ஆசை. 'அன்ப! தில்லையிலே ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள நம் நடனத்தில் ஈடுபட்டுத் திளைத்த சிந்தையனாய் நம்மைப் போற்றிப் பதிகம் பாடினான் சுந்தரன். அதைக் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டேன். காலந்தாழ்த்தது' என்று அருளிச் செய்தாராம்.

ஒரு அடியாரிடத்தில் மற்றொரு அடியாரைப்பற்றி அறிவிக்கும் முறை எவ்வளவு நயமாக இருக்கின்றது. அரசரும் உடனே புறப்பட்டார். தில்லைக்குச் சென்றார். உளமும் புலனும் ஒருவழிச்சென்று உருக ஆனந்த

தாண்டவத்தைத் தரிசித்தார். தோழர் பாடிய பாடலைக் கேட்ட திருச்செவியால் அரசர் பாடிய சொன்மாலையையும் கேட்ட இறைவர் அதற்குப் பரிசிலாகஅங்கும் சிலம்போசையைக் கேட்பித்தார். அங்குநின்றும் புறப்பட்ட சேரமான் ஆரூர் வந்து சுந்தரரைத் தரிசித்தார். ஒருவர் ஒருவரிற் கலந்த உணர்வினரானார்கள். அதுமுதல் தம்பிரான்தோழர் சேரமானுக்கும் தோழராயினர். இருவரும் ஒருசேரச் சென்று வணங்கிய தலங்கள் பல. பிறகு சேரநாடு சென்று சேரர் அரண்மனையிலும் சுந்தரர் சிலநாள் தங்கியிருந்தார். 'என்னுயிருக்கு இன்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானை வன்நெஞ்சக் கள்வனேன் மறந்திரேன்; நீர் அரசளிப்பீர்' எனச் சொல்லி விடைபெற்று வந்துவிட்டார் திருவாரூருக்கு. சில நாள் கழிந்தன. மறுமுறையும் சுந்தரர் சேரநாடு சென்று சேரமானுடன் கலந்து சேரநாட்டுத் தலங்களையும் தரிசித்தார்.

ஒருநாள் திருவஞ்சைக்களத்திலே சுந்தரர் பாடுகின்றார். உலக பாசத்தை அறுத்திடவேண்டும் என வேண்டுகின்றார். இறைவன் ஆணைப்படி தேவராதியோர் வெள்ளானையுடன் அங்குவந்து அருளிப்பாட்டைத் தெரிவித்தார்கள். சுந்தரரும் அதன்மீது அமர்ந்து கயிலைநோக்கிச் செல்கின்றார். இதனை அறிந்தார் சேரமான். தோழரைவிட்டுப் பிரிந்து எவ்வாறு இருப்பார்? அருகிலிருந்த குதிரையில் ஏறிக்கொண்டார். சிவமூல மந்திரத்தை அதன்காதில் ஓதினார். பஞ்சாக்கரந்தானே நடுக்கம் கெடுப்பது. 'கூற்றுவன் அஞ்ச உதைத்தது அஞ்செழுத்துமே' என்றார் அப்பர் சுவாமிகள். கல்லுடன் சேர்த்துக் கடலில் தள்ளப்பட்ட அப்பரடிகள் எந்தநிலை வரினும் வருக; யான் எந்தையை ஏத்துவன் என்று அஞ்செழுத்தை அன்போடு ஓதினார். அப்பெருங் கல்லும் அரசுமேல்கொளத் தெப்பமாய் மிதந்தது என்ற வரலாற்றை அவர்களே திருநீலக்குடித் திருப்பதிகத்தில் சொல்லியுள்ளார்கள்.

பிறவி பெரியகடல்போன்றது. இருவினைகளாகிய இரண்டு வலிய கயிறுகளைக்கொண்டு, மும்மலங்களாகிய கற்களோடுசேர்த்துக் கட்டப்பட்ட ஆன்மாக்கள் அக் கடலில் வீழ்ந்துகிடக்கின்றார்கள். அவர்களையே கரை யேற்றும் சக்திபெற்றது ஐந்தெழுத்து. சாதாரணமான கயிற்றைக்கொண்டு, சாதாரணமான ஒருகல்லிலே சேர்த்து அப்பரடிகளைக்கட்டி, சாதாரணமானகடலிலே தள்ளினார்கள். தள்ளப்பட்ட அவர் கல்லேதெப்பமாகக் கொண்டு கரையேறினார். இந்த ஐந்தெழுத்தின் உதவி யால் என்று சொல்லுவதில் என்ன சிறப்பு என்று சாதுரியமாகச் சொல்லுகிறார் சேக்கிழார். ஆகவே இத்தகையசிறப்புற்ற பஞ்சாக்கரம் குதிரையின்காதில் பட்டஅளவிலே ஆகாயத்திலேபாய்ந்துசென்றது. வெள் ளானையை வலம்வந்தது. அதற்கு முன்னுகச்சென்றது. இருவரும் கயிலையை அடைந்தார்கள்.

இந்த பஞ்சாக்ஷரந்தான் பிறவிக் கடலுக்குத் தெப்பமாவது. 'அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக் கின்றேனை' 'நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்' என்றெல்லாம் மணிவாசகர் சொல் லுகிறார். 'நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே' என்றார் சுந்தரர். எல்லாம் அரன்நாமமே சூழ்க என்ற திருப்பாசுரப்பகுதிக்கு, 'எல்லாம் அரன் பெயர் சூழ்க என்றது தொல்லுயிர் யாவையும் வாழி அஞ்செழுத்தோதி வளர்கவே' என்று உரை வகுக் கின்றார் சேக்கிழார் பெருமான். உடலுக்குள் போகா மலே வாயிலேவைக்குமளவில் மருந்தாகித் தீயபிறவி நோய் தீர்க்கும் மருந்துதான் ஸ்ரீபஞ்சாக்கரம் என்று சொல்லுகிறார் நக்கீரதேவர்.

'படைக்கலமாக உன் நாமத் தெழுத்தஞ்சும் என் நாவிற் கொண்டேன்' 'உனது அருளால் திருவாய் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்; தருவாய் சிவகதி நீ' என்றெல்லாம் வீரமொழி விளம்புகிறார் நமது

சொல்லரசர். ஆலைப்படுகரும்பின் சாறுபோல அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத்தான் என்றுதன் அநுபவத்தையும் கூறுகிறார். மந்திரம் நமச்சிவாய ஆகநீறணியப் பெற்றால் வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட்டன்றே என்று பயனை உவமைமுகத்தால் விளக்கிக் காட்டுகின்றார். 'வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானை' என்ற பகுதியால் உள்ளன்போடு மனம் ஒன்றி உச்சரிக்கவேண்டும் என்பதை வற்புறுத்திக் காட்டுகின்றார். இவ்வாறு பலபடப் பேசுகின்ற அப்பர் சுவாமிகள் நமச்சிவாயப் பதிகம் என்ற ஒரு திருப்பதிகமே அருளியுள்ளார்கள். அதிலுள்ள பத்துப் பாடல்களும் ஐந்தெழுத்தின் பெருமையினை நன்கு அறிவிப்பன. எளிய இனிய நடையில் திகழ்வன. அதில் ஒன்று பாருங்கள். அதனைமட்டும் சொல்லி முடித்துக் கொள்கின்றேன்.

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன்அஞ்சு ஆடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே.

---


## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பாரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்

தருமபுரம், மாயூரம் P. O.

தருமபுர ஆதீனம்

## ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

# காரைக்கால் விஜயம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் சிவ தல வழிபாட்டுத் திட்டப்படி 4—1—52 முடிய 105 தலங்களில் வழிபாடு நடந்தேறின. அதன் நிறைவு நாள் 5—1—52 சனிக்கிழமை. அன்று வழிபடுவதாகத் திட்டமிடப்பட்ட தலங்கள் திருவேட்டக்குடி, திருத்தெளிச்சேரி, திருநள்ளாறு, திருத்தருமபுரம் என்ற நான்கு. அன்று காலையில் மகாசந்நிதானமவர்கள் ஆதீன மடாலயத்தில் வழக்கம்போல் பூஜையை முடித்துக்கொண்டு, பரசலூர் ஸ்ரீ வீரட்டேஸ்வரரையும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரரையும் அபிராமியையும் தரிசித்து, திருவேட்டக்குடி ஸ்தலத்திற்கு எழுந்தருளினார்கள்.

காரைக்கால் பிராந்திய எல்லையிலேயே அன்பர்கள் கூடி வரவேற்று அழைத்துச்சென்றார்கள். திருவேட்டக்குடியில் அன்பர்கள் ஆர்வத்தோடு ஆலயத்தில் கூடியிருந்தார்கள். எங்கும் மகரதோரணங்களாலும், ஆலவட்டங்களாலும், தழைகளாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆலயத்தின் திருவாயிலுக்கு எழுந்தருளியானதும் சம்பிரதாயப்படி அருளிப்பாடு பார்க்கப்பெற்றது. அருச்சனை வழிபாடுகள் நடந்தேறின. ஆலயத் திருப்பணிச்செல்வர் தேவகோட்டை உயர்திருவாளர், மெ. ராம. அ. சுப. இராமநாதன் செட்டியாரவர்கள் உபசரிப்பு போற்றத்தக்கது. வழிபாட்டிற்குப் பிறகு சபை கூட்டினார்கள், மகாசந்நிதானம் அவர்களை எழுந்தருளச்செய்து காரைக்கால் திருவாளர் கா, தி. சீனுவாசபிள்ளை மேயர், M. L. A. அவர்கள் வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தார்கள். அது வருமாறு:

தமிழையுஞ் சைவத்தையும் வளர்க்கும் பெரும்பணி பூண்டு சிறந்து விளங்கும் செயலுடைய செம்மலே வருக! வருக! மகா

சந்நிதானத்தின் ஆட்சிக்காலத்தில் எடுப்பித்த ஆலயங்களும் புதுப்பித்த கோயில்களும் ஏற்படுத்தப்பெற்ற நிபந்தங்களும், எத்துணை சிறந்தபலன் அளிக்கின்றன,

கல்விச்சாலை, மருத்துவச்சாலை, வாசகசாலை, அன்னசாலை, ஆதுலர்சாலை முதலிய நாட்டின் தேவைகளை உணர்ந்து ஆவன புரிந்து அவ்வப்போது ஆங்காங்கும் நேரில்சென்று பரிபாலிக்கும் பண்புடைய தங்கள் ஆட்சி நீடித்து நிலவ எல்லாம் வல்லானை இறைஞ்சுகின்றோம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அதனை அன்போடு ஏற்றுக்கொண்டு ஆசியருளுகையில்,

"மக்கட்பிறவி மிகச்சிறந்த பிறவி, அப்பிறவி எடுத்ததன் பயன் கடவுளை வழிபடுதல். வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின் என்று பெற்ற பிறவியை மதிக்கின்றார் அப்பர் அடிகள், சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் செப்ப நா அமைத்தேன், வந்தனைசெய்யத் தலை அமைத்தேன் கை தொழ அமைத்தேன், இவைதான் இறை வழிபாட்டிற்கு என யான் விதித்துக்கொண்டவை என்கிறார் செல்வத்தில் திளைக்கின்ற அரசர். அவர்தான் சேரமான் பெருமாள் என்று பேசப்படுபவர். வானிடத்திலுள்ள தேவர்களும்கூட இம்மண்ணுலகத்திற்குவந்து அருச்சனை வழிபாடு செய்கின்றார்கள்; அப்படியிருக்க மண்ணுலகமக்கள் அவ்வாறுசெய்து இறையருளுக்குப் பாத்திரராகாமல் வீணுகக் காலத்தைக் கழிக்கின்றார்களே என்று இரங்குகிறார் ஆசாரியமூர்த்திகள்; ஆதலால் உடலுள்ளபோதே அதன் பயனைப் பெறவேண்டும், பெறுவதற்கு வழிதான் இறைவழிபாடு, தலை பெற்றபயன் எது? பெருமானை வணங்குதல்; கண்ணால் தரிசித்தல், வாயால் அவன் புகழைப்பாடுதல், கால்களால் வலம்வருதல், இக்காரியங்கள் இலேசான காரியங்களல்லவா? இதற்குச் சிரமம்வேண்டுமா? இவைகளைச்செய்வதால் வரும்பயன்தான் திருவருள். இன்னும் நம்மால் இயன்றளவு பூஎடுத்து மாலைகட்டி, பெருமானுக்குச் சாத்தச் செய்யலாம், திருக்கோயிலில் திருவலகிடுதல் திருமெழுகிடுதல் முதலிய பணிகளையும் செய்யலாம், செய்கின்ற

பணி எளிமையாக யாரும் செய்யக்கூடியதுதான்; பெறுகின்ற பயனோ மிகப்பெரியது, 'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்? அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்; யாது நீ பெற்றதொன்று என்பால்' என்று வியக்கின்றார் மணிவாசகர்."

என்றெல்லாம் சொல்லி இறைவழிபாடு மக்களுக்கு அவசியம் என்பதை வற்புறுத்தினார்கள்.

அங்கிருந்து திருத்தெளிச்சேரிக்கு எழுந்தருளினார்கள். அங்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வருகையைக் குறித்து அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. ஆங்காங்கு வளைவுத் தட்டிகள் மகரதோரணங்கள் எல்லாம் காட்சியளித்தன. ஆலய சம்பிரதாயப்படி அருளிப்பாடு பார்க்கப் பெற்றது. வழிபாடு முடிந்தபின் சபைகூடிற்று. தேவஸ்தான பரிபாலகர்கள் சார்பில் ஒரு வரவேற்புரை வாசித்து அளிக்கப்பெற்றது. அது இங்குத் தரப்படுகிறது:

## சித்தாந்தச் செந்நெறி புரக்கும் செம்மலே வருக! வருக!

சிவம் பேணி, சைவங்காத்து, சித்தாந்தச் செந்நெறியை உலகுய்ய, உயிர்களுய்ய, பரப்பும் தனிச் செம்மலே வருக! வருக! பூவலர்ந்தன கொண்டு முப்போதும் பொற்கழல் தேவர் வந்து வணங்கும் திருத்தெளிச்சேரி உறையுஞ் சிவத்தைப்பேண வந்த செல்வரீர்! உங்கள் வருகை நல்வருகையாகுக!

சிவாலயங்கள் பலவற்றைச் சீரிய முறையில் பரிபாலித்துச் சிறப்போடு பூசனைகள் பலவாற்றிச் செவ்விய திருமுறைகள் ஓதுவித்து, நாட்டு நலனுக்கு ஆவன செய்து, கால நிலைக்கேற்ப உயிர்களின்பால் கருணைபூண்டு கல்விகற்பிக்கும் கலாசாலைகள் திறந்து, அறம்பல புரிந்து, சாஸ்திரங்களையும் தோத்திரங்களையும் சமயாபிமானிகட்கு அச்சிட்டு வழங்கி, தான தருமாதிகளை அன்போடு புரியும் மகாசந்நிதானமவர்கள் எல்லா நலனையும் எய்தி, எங்கட்கும் நல்குமாறு எல்லாம் வல்லானை இறைஞ்சுகிறோம்.

அதற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆசியருளினார்கள். அங்கும் இறை வழிபாட்டைப்பற்றி விளக்கியதோடு 'கோயிலில் அருச்சனை புரியும் பேறுபெற்றவர்கள் ஆதிசைவர்கள்; ஆதிசைவர் மரபிலே திருவவதாரம் செய்தருளிய சுந்தரர் குலத்தைக் குறிப்பிடவந்த சேக்கிழார் 'மாதொரு பாகனார்க்கு வழிவழியடிமைசெய்யும் வேதியர்குலம்' என்று அக்குலப் பெருமையைப் பேசுகின்றார்கள்; ஆகவே முப்போதுந் திருமேனிதீண்டும் பேறுபெற்ற அவர்கள் உள்ளத்தூய்மையும் உடற்றூய்மையும் பெற்றிருக்கவேண்டும்; சிவாகம சாஸ்திரங்களில் நன்றாகப் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்; மூர்த்திகளின் தத்துவங்களை நன்றாக அறிந்திருக்கவேண்டும்; வழிபட வருகிறவர்களுக்கு அவைகளை எடுத்துச்சொல்லவேண்டும்; அப்போதுதான் அவர்களுக்கு வழிபாட்டில் உறைப்பு உண்டாகும். அருச்சனை வழிபாடு செய்யும் காலத்தில் அவர்கள் பெருமானிடம் காட்டும் அன்பும் பணிவார்ந்த செயல்களும்தான் வழிபட வரும் மக்களுக்குப் பக்தியை உண்டுபண்ணக்கூடியது என்பதையும் குறிப்பிட்டார்கள்.

பின்னர் அங்கிருந்து காரைக்கால் ஸ்ரீ கயிலாசநாதர் கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு முடித்துக்கொண்டு காரைக்காலம்மையார் கோயிலுக்கு எழுந்தருளினார்கள், அங்கும் வழிபாடு சிறப்பாக நடைபெற்றது, காரை சைவ சித்தாந்த வித்தியாச்சிரமத்தின் சார்பில் பொதுக்கூட்டம் கூட்டினார்கள், அதில் ஸ்ரீலஸ்ரீமகா சந்நிதானம் அவர்களுக்குக் கீழ்க்காணுமாறு அச்சிட்ட உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பெற்றது.

ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப் பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை மாசிலா நீறழித்து அங்கு அருவிதர மயிர் சிலிர்ப்பக் கூசியே உடல் கம்பித்திடும் மெய்க்குண மிக்க சைவச் செம்மலே! வருக! வருக!

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப் பாதம் ஒருகாலும் மறவாமைக் குன்றாத உணர்வுடைய சித்தாந்தச் செல்வமே! உங்கள் வருகை நல்வருகையாகுக,

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும் இன்றெழுந்தருளப் பெற்ற பேறிதனல் எற்றைக்கும் திருவருளுடையோம், நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தும் உய்ந்து வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம் என்பாம்.

இதனையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் அன்போடு ஏற்றுக்கொண்டு ஆசி வழங்கினர்கள், அடுத்து திருநள்ளாறு, திருத்தருமபுரம் ஆகிய தலங்களிலும் வழிபாடு செய்தருளி னர்கள்.

திருவாளர் சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் தமது பங்களா வில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களை எழுந்தருளுமாறு வேண் டிக்கொண்டு அன்போடு உபசரித்து மாகேசுவரபூஜையும் செய்து வைத்தது இவ்விஜயத்தில் பாராட்டத்தக்கதாக இருந்தது.

இவ்விதமாக ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில், தனுர்மாத 108 திருத்தலவழிபாட்டினைக் காரைக்கால் பிராந்தியத்திலுள்ள ஆதீனம் கோவில் காரை தருமபுரத்தில் முடித்தருளத் திரு வுளம்கொண்டசெய்தி அறிந்த அந்நாட்டுப் பிரமுகர்களான திருவாளர்கள் செனட்டர் கனம், S. பக்கிரிசாமிபிள்ளை, மேயர், காரைக்கால் M.L.A, உணவுமந்திரி கனம் சிவசுப்ரமணியபிள்ளை, மேயர், திருமலைராயன்பட்டினம் M. L. A, லாயர் சுப்பையா முதலியார் காரை சித்தாந்த வித்தியாச்சிரம அமைச்சர், திரு. சுப்பையா முதலியார், P. குசைநாத பிள்ளை, மேயர் நெடுங் காடு, M. L. A; சோமசுந்தரம் பிள்ளை M. L. A; துரைசாமி பிள்ளை கண்ட்ராக்டர் காரைக்கால், சர்மிஞதபிள்ளை காரை மேரி செகரட்டரி பழனிவேலு பிள்ளை M.L.A; முதலிய பல அன்பர் களும் மிகவும் உத்ஸாகத்துடன் சகல ஏற்பாடுகளையும் மேற்பார் வையிட்டனர். வரவேற்புகளிலும் வழிபாடுகளிலும் கூடஇருந்து சிறப்புற நடத்தி வைத்தார்கள். இந்த அன்பர்களின் ஆர்வம் மிகப் பாராட்டத்தக்கதாக இருந்தது.

---

78

# கோசார பலன்

[ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ முத்து சோதிடர், திருவிடைமருதூர்]

(காஷல் தைமீ 1உ முதல் 30உ வரையில்)

## 1. மேஷராசி பலன்.

சுபலக்கினமான மேஷராசிக்குத் தைமாதம் பூரண சுபத்தைத் தரும். காரியஸித்தி. வீண் அலைச்சலாக இருந்தவர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். நூதன பிரபுவின் சிநேகம். தொழிலில் லாபம். பந்து மித்திர ஸமாகமம் (சேர்க்கை). குடும்ப சுகம். வயிற்றளைச்சல். உஷ்ண பீடை. ஸத்விரயம். கோபாதிக்யம். தர்ம புத்தி. சிருங்கார ரஸ பிரவிர்த்தி. சத்துரு நாசம். சுகப்பிரவிர்த்தி. இஷ்டசித்தி இவைகள் ஏற்படும். ஷை மாதம் 9உ வரை ஷை ராசிக்காரர்களுக்கு இல்லறத்தில் சச்சரவுகள் ஏற்படும். 15உக்கு மேல் வைத்தியச் செலவும், வியவகாரச் செலவும், இடதுகாலில் காயமும் ஏற்படும். ஷை மாதத்தில் சனி, புதன் கிழமைகளில் செய்யும் காரியங்கள் சீக்கிரத்தில் விரும்பியபலனைத் தரும்.

## 2. விருஷபராசி பலன்

இந்த ராசிக்காரர்களுக்கு முதலில் 10 தினங்களுக்கு சுபம் இராது. அத்துடன் எதிர்பாராத விபத்தைக் கொடுக்கக்கூடிய சம்பவங்களும், காரிய விக்கினமும், சரீரத்தில் ஜலதோஷ உபாதையும், தீட்டுக் காத்தலும், நிந்தையான வார்த்தைகளும் ஏற்படும். ஷை மாத மத்திய காலத்தில் சத்துரு பராஜயம், உலோக பாத்திர லாபம், காரியசித்தி, சொற்ப தனலாபம், தனக்கு மேலோரால் அனுகூலங்கள், இரத்தினாபரணசேர்க்கை, இல்லற சுகபோகம், தெற்குத்திக்கில் பிரயாணம், தூர தேசத்திலிருந்து பந்துமித்திரர்களின் சேர்க்கை இவைகள் ஏற்படும். ஷைமாதக்கடைசிபாகத்தில் முக்கியபந்துக்களின் தேக அசௌக்கியம், விதவாஸ்திரியின் மூலம் கலகம், அபவாத பயம், வீண்செலவு, வாயுபீடை, மனக்கிலேசம், சதா அபசகுனங்கள் ஏற்படல், விவசாயத்தில் பலன் குறைவுபடுதல் இவைகள் ஏற்படும். ஷை ராசிக்காரர்கள் ஸ்திரமான காரியங்களையும், விருத்திகாரியங்

களையும் விலக்குவது நலம். இந்தராசிக்காரர்களுக்கு இம் மாத வியாழன், சனிக்கிழமைகள் சுபபலனைத்தரும்.

## 3. மிதுனராசி பலன்.

இந்த ராசிக்காரர்களுக்கும் இம்மாதமுற்பகுதியில் சிரமமே காணப்படும். அஜீர்ணரோகம், கிலேசம், குடும்ப கலகம், மனதிற்குச் சஞ்சலம், நஷ்டம், சோர பயம், நித்ரா பங்கம், சத்துரு பீடை, சோகம், புத்தி ராதிகளுக்கு வியாதி, பயம், தொழில் கவலை, மேலோர் வருத்தம், இவைகளும் நடுப்பகுதியில் களத்திரவிரகம், ஆயாஸம், தொழில் மந்தம், காரிய ஹானி, பிர யாசைக்குத் தக்க லாபமில்லாத் தன்மை, அவமானச் சொல் கேள்வி, காரிய விரோதம் இவைகளும் கடைசிப் பகுதியில் வாக்சாதுர்யத்தால் சகலகாரிய வெற்றியும், சுகபோகங்களும், நஷ்டதன பிராப்தியும், கட்டிடவேலை களும், வேலையாட்கள் குறைவும், நீசாசாரங்களும், நாஸ் தீகஜன பழக்கமும், குருஜனரிஷ்டங்களும், ஜீவனோபாய உத்தியோகாதி காரியங்களில் மேலோர் மனஸ்தாபமும் இடம்மாற்றமும் உண்டாகும். இவ்விராசிக் காரர்களுக்கு இம்மாதத்தில் பூரணசுபமில்லை. இவர்களுக்கு வியாழன் வெள்ளிக்கிழமைகள் சுபத்தைத்தரும்.

## 4 கடகராசி பலன்

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பூரணசுப மாகும். விவசாயத்தில் விசேஷ லாபம், வியாபாரிக ளாலும் வியாபாரவிருத்தியும், நான்குமடங்கு லாபமும், ஸ்திரீ புத்ராதிகளின் சௌக்கியமும், வித்துவான் களுக்குக் கீர்த்திப்பத்திரங்களும், ஜயபேரிகையும், எங் கும்புகழ்மாலையும், தூரயாத்திரைகளும், விவகார விஜய மும், நித்திய மிருஷ்டான்ன போஜனமும், சந்தோஷ மும், சுகபோகங்களும், தொழிலில்லாபமும், துச்சங்க மும், தர்மபிரவிர்த்தியும், துச்சங்கத்தால் தர்மதுரோ கமும், சுப சோபனதிகளும், சென்ற இடமெல்லாஞ் சிறப்பும், வர்க்கமேன்மையும், தொழிலாளர்களுக்கு நிறைந்த வருமானமும், இல்லறசுகமும் ஏற்படும். இந்த ராசிக்காரர்களுக்கு இமமாதத்தில் வியாழன் செவ்வாய் கெட்டபலனையும், புதன் வெள்ளி சனிக்கிழமைகள் சுபபலனையும் தரும்.

## 5. ஸிம்மராசி பலன்.

இந்தராசிக்காரர்களுக்கு முற்பகுதி பத்து தினங்களில் சௌக்யம் காணும். சத்ருமைத்திரம், பணப்புழக்கம், காரியானு கூலம், பிரபுக்களின் ஸ்னேகம், சுகம், சில நஷ்டதனபிராப்தி, மனதிற்குச் சந்தோஷம், காரியசித்தி, வெற்றி, சில காரியத்தில் கலவரங்கள் ஏற்பட்டுப் பிறகு அனுகூலம் அடைதல், பெரியோர் தரிசனம், நேசம், தொழிலாளிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் லாபகரமும், எஜமானுடைய பிரீதியும், உண்டாகும். நடுப்பகுதியில் ஆப்தனுக்குத் துக்கமுண்டாதலும், கட்டுப்படுதலும், வீண் அலேச்சலும், நஷ்டகரமும், திருட்டுப்பயமும், குலாரிஷ்டங்களும், கீழ்த்தரவேலைக்காரர்களால் கலகமும், வாயுபீடையும், வித்யார்த்திகள் படிப்புக்கு விக்னமும், உத்தியோகஸ்தர்களுக்கு எஜமானுடைய கோபமும், காலிகன்று குறைவும், யாதவர்களுக்கு நஷ்டமும், விவசாயிகளுக்குப் பயிர்களிலிருந்து ஈதிபாதைகளால் நஷ்டமும் பிரபுக்களுக்கு இராஜாங்க பீடையும் உண்டாகும். இம்மாதம் செவ்வாயும், வெள்ளியும் இவர்களுக்குச் சுபமாகும்.

## 6. கன்னியாராசி பலன்.

இவ் விராசிக்காரர்களுக்கு இம்மாதம் மத்தியம பலனேயே தரும். சுபம் பூர்ணமில்லே. தபோபலமுள்ளவர்களும், தெய்வபலமுள்ளவர்களும், ஈஸ்வர பக்தர்களும் இவ்விராசிப்பலனை ஜெயிப்பார்கள். இதனுல் மிக்க துக்கம் அடைவார்கள். அதாவது நீசஜாதியில் கலகம், விவாதம், அன்னத்துவேஷம், சத்ருபயம், பந்துஜனரிஷ்டம், நிர்ப்பந்தவாசம், அனுவசியமான தொல்லேகள், வீண் அலேச்சல், தொழில்நஷ்டம், கீர்த்திபங்கம், ரோக பீடைகள், இவைகள் ஒன்றன்பின் ஒன்ருக வரும். இவைகள் 15உ வரை நீடிக்கும். பிற்பகுதியில் கொஞ்சம் நலமாக இருக்கும். ஸத்கார்யப் பிரவிர்த்தியும், ஸாதுஜன சேர்க்கையும, ஸத்புத்தியும், இல்லற சுகமும், வாகன லாபமும், காலிகன்று விருத்தியும், பந்துமித்திரர்களுடைய சேர்க்கையும், கிரய விக்கிரயங்களும், கட்டிட வேலேகளும், விவசாயத்தில் பலப்பிராப்தியும் ஏற்படும். இவர்களுககு, வியாழன் வெள்ளிக்கிழமைகள் சுபத்தைத்தரும்.

## 7. துலாராசி பலன்

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பூரணசுபத்தைத்தரும். மேலோர் பெரியோர் தரிசனம், மேன்மை, சத்துரு ஜயம், தொழிலில் எதிர்பார்த்ததைவிட அதிக லாபம், வியாபாரிகளுக்கு வியாபார அபிவிருத்தி, தொழிலாளிகளுக்குத் தொழில் மேன்மை, அதிகவரவு, ஆரோக்கியம், காரியசித்தி, வெகுநாள் பார்க்காத பந்துமித்திரர்கள் சேர்க்கை, குடும்பசுகம், வாக்சித்தி, தேவதா குருபக்தி, வெகுஜனசகாயம், பிரபுக்களுக்குக் கீர்த்திபத்திரம் கிடைத்தல், மனோநிம்மதி முதலிய சுப பலன்கள் இம்மாத முற்பகுதியிலும், பிற் பகுதியில் அதிக விரயம், வீண் அலைச்சல், நம்பினவர் மோசம் செய்தல், கீழோர் தொல்லை, ஈதிபாதைகள், தனதான்யக்குறைவு, அபவாதச்சொல் கேள்வி, வீண் மனஸ்தாபம், கோர்ட்டில் சாட்சிசொல்லுதல், முதலிய திருப்தியில்லாத பலன்கள் ஏற்படும். இந்த ராசிக்காரர்களுக்குத் தெய்வ பலத்தால் துன்பம்நீங்கும். இவர்களுக்குப் புதன் திங்கள் சுபதினமாகும்.

## 8 விருச்சிகராசி பலன்.

இவர்களுக்கு இம்மாதம் பூரண சுபகாலம், ஸகல காரிய சாதனை, விசேஷ வைபவங்களில் முதன்மை வகித்தல், நஷ்டதனபிராப்தி, இல்லற சுகபோகங்கள், சத்துரு மைத்திரமாகுதல், வாகனலாபம், வம்சவிருத்தி, புத்திரசுகம், ரத்தினாபரணம் வாங்குதல், மேலோர் பெரியோர்வருதல், குருதேவபக்தி, ஸத்சங்கம், அஸாத்தியஸாதனம், வடக்கு மேற்குத் திக்கில் பிரயாணம், உத்தியோகலாபம், உத்தியோகஸ்தர்களுக்குப் பிரமோஷனுடன் இடம்மாறல், மனதிற்குச் சாந்தியுண்டாதல், முதலியன ஏற்படும். இம்மாதக் கடைசியில் அதிகச் செலவுகளும், திரவியச்செலவில் காரியசாதனமும் உண்டாகும்; விவசாயபலன் குறைந்துகாட்டும். இவர்களுக்கு வியாழன் வெள்ளி சனிக்கிழமைகளில் நலம்காட்டும்.

## 9. தனுர்ராசி பலன்.

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் பூராசுபத்தை கொடுக்காது. முற்பகுதியில், அதிகச்செலவும், முகம் தெரியாதவர்களால் வஞ்சிக்கப்படும்தன்மையும், சிரோ

வேதனையும், கண் எரிச்சல் முதலிய உஷ்ண பீடைகளும், காரியவிக்னமும், நிந்தைகேள்வியும், பந்துஹானியும், சுகபங்கமும், செய்தொழிலில் லாபக்குறைவும், உத்தியோகஸ்தராகில் வேலைக்கடுமையால் ஆயாசமும், மனக்கிலேசமும், வெறுப்பும், பலஇடையூறுகளும் ஏற்படும். பிற்பகுதியில் சிற்சில லாபங்களும், வாக்ஸித்தியும், சுகபோஜனமும், வாகன சுகமும், கிரக க்ஷேத்திராபிவிருத்தியும், விவசாயத்தில் பலவிசேஷங்களும், பந்துமித்திர சேர்க்கையும், நூதனவஸ்திராபரணம் சேருதலும், மேற்குத்திக்கில் பிரயாணமும், இஷ்டகாரியசித்தியும், கூட்டுறவுகளும் ஏற்படும். இவர்களுக்கு ஞாயிறு, செவ்வாய், வியாழன், சுபபலனைத்தரும்.

## 10 மகரராசிப்பலன்

இம்மாதத்தில், இவர்கள் பூரணசுபமடையமாட்டார்கள், சரீர ஆயாஸம், பூர்வீக தனசம்பந்தமாய் சிற்சில மாறுதல்கள், வீண் அலைச்சல், இல்லறகஷ்டம், சதா கஷ்டமானநிலையோ காட்டுதல், விரோதம், வாக்கடினம், கோபாதிக்யம், கலகம், சத்கார்யாஹனி, இடம்மாறல், பயங்கரஸமாச்சார கேள்வி, மனக்கிலேசம், வாகனத்திவிருந்து நழுவுதல், துர்விரயம், அபவாதம், நேத்திர உபாதி, ஜனபவாதம், சொற்பவரவு, அதிகச்செலவுகள் ஏற்படும். நடுப்பகுதி பத்து தினங்களில் மத்யம பலன் காட்டும், முன்னும் பின்னும் முற்கூறிய பலன்கள் ஏற்படும். இந்தராசிக்காரர்களுக்கு இம்மாதம், வியாழன் சனி ஞாயிறு சுபநாட்களாகும.

## 11 கும்பராசிப்பலன்

இவர்களுக்கு இம்மாதம் சுபமிராது. ரொம்பவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கட்டுப்படுதல், சொத்து நஷ்டம், ரிண ரோக சத்துருபாதை, இடரிவிழுதல், காலிகன்றுநஷ்டம், தனநஷ்டம், வாகனநஷ்டம், ஆப்தபந்துநஷ்டம், மித்ரவிரோதம், குடும்பகலகம். அவமானச்சொல், வியாதிபயம், குலஹீனச் சேர்க்கை, காரியவிக்னம், பிரபுகோபம், ஸேவக ஜனரிஷ்டம், தொழில் கவலை, ராஜாங்கபீடை, மனம் ஒரேகுழப்பத்திலிருத்தல் முதலிய பலன்களே நடைபெறும், இம்மாதக்கடைசியில் சொற்பதனவரவும், கொஞ்சம் சுகமும் காணும். இவர்கள் சனி செவ்வாய்க்கிழமைகளில் ஒருகாரியமும் எத்தனிக்கக் கூடாது. வெள்ளி புதன் சுபத்தைத்தரும்.

## 12 மீனராசிப் பலன்

இவர்களுக்கும் இம்மாதம் மத்தியமம்தான். தொழில் நிமித்தம் இடம்மாறல், வீடுமாறல், அரண்யசஞ்சாரத்துக்குச் சமமாயிருத்தல்; வரவுக்கு மிஞ்சிய செலவு, விருணம் ஏற்படல், கடன்வாங்குதல், ஸகா அலேச்சல், பயம், சத்துருபீடை, களத்திர புத்திர பீடைகள், மன அமைதியே இல்லாதிருத்தல், முதலிய பலன்கள் முன்னும் பின்னும் விசேஷமாய் நடக்கும். நடுப்பகுதி பத்துத்தினங்களில் கொஞ்சம் நன்மைகாட்டும். பணப் புழக்கம், வியாபார விருத்தி, கொள்முதல் அதிகமாதல் தெய்வசக்தி பிரகாசித்தல், இஷ்டதேவதானுக்கிரஹம், இவை கிட்டும். இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் செவ்வாய், சனிக்கிழமைகளில் துன்பமுண்டாகும். வியாழன், வெள்ளிகளில் சுபத்தைத்தரும்.

### முக்கியகவனிப்பு:

ஷை மேஷாதிராசிபலன்கள், அந்தந்த ராசிக்காரர்களுக்கு: தசாபுத்திபலன்கள் சுபகாலமாயிருந்து, கோசாரபலன் கெடுதலாயிருந்தால், கெடுதல் அதிகம் இராது. ஆனல் சுபம் மத்யமபலனைத் தரும். தசாபுத்தி பலன்கள்கெடுதலாயிருந்தால், புத்திபலனையும்சேர்த்துக் கொண்டு, கோசார கெடுதலும் அதிகமாகும். கோசாரத்தில் எவ்வளவு சுபமிருந்தாலும், சுபம் மிகக் குறைந்து விடும். ஆகையால் தசாபுத்திபலன் நன்றாயிருந்து, கோசாரபலனும் நன்றாயிருந்தால் விசேஷ சுபமுண்டாகும். தசாபுத்தியும்கெட்டு, கோசாரபலனும்கெட்டதானல் கெடுதல் அதிகமாகும். ஒன்று நல்லது மற்றொன்று கெடுதலானல், மத்யமமாயிருக்கும். அதாவது சுபமும் அசுபமுமிராது. ஆகையால் அவரவர்கள் தசாபுத்தி காலத்தைத் தெரிந்துகொண்டு, கோசாரராசி பலனையும் தெரிந்துகொண்டால் மிக்கநலம். ஜாதகமே இல்லாதவர்கள் தன்னுடைய பெயரின் முதலெழுத்துக்கு எந்த நக்ஷத்திரம்ராசியாகிறதோ அதற்குப்பலன், மேற்கண்ட விதம் பார்த்துக்கொள்ளவேண்டியது.

சுபம்.

எப்பொருளும் - சடமும் சேதனமுமாயிருக்கின்ற எப்பொருளும், எனையொழித்து - என்னைத்தவிர்த்து, உளவோ - வேறாக உள்ளனவோ?

வி - ரை: தனக்கு வலிமையின்றிப் பிறர்பலத்தைக் கொண்டு கருவமடைதல் இழுக்கு என்பான் 'மற்றையோர்...... ........ அடைகுதி' என்றான். தேவி யியல்பிலேயே எல்லா வலிமைகளும் பெற்று எல்லாப்பொருள்களினுமுள்ள சக்தி உருவங்களாக விளங்குதலையறியாது "மற்றையோர் வலித் துணையினால் வலியுடையாள்நீ" என்று சும்பன் கூறினமையின் அவனை மூடனென்றாள். சக்தியையின்றி விளங்குகின்ற பொருள் உலகில் ஒன்றுமில்லையாகலின் "இவண்டானுற்றவெப்பொருளும் வெனையொழித்துளவோ சொல்" என்றனள். "சத்தியுஞ்சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லாம்" என்பது சிவஞான சித்தியார். 2

எனையொ ழித்திரண் டாவதா மொருபொரு ளில்லை
இனையர் யாருமென் பூதிக ளென்னிடை யொளிப்பர்
துனையிற் காணெனு முன்னரே தோகைசேர் சிகியை
யனைய தேவிய ரெவருமவ் வம்மைதன் றனுவில்.

கு - ரை தேவியே ஜெகத் சொரூபிணியாகலின் 'எனையொழித்திரண் டாவதா மொருபொரு ளில்லை' என்றனள். இனையர் - பிரமாணி முதலிய இச்சக்திகள். என்பூதிகள் - என்னுடைய சம்பந்த முடையவர்கள். என்னிடை யொளிப்பர் - (என்னினின்றும் தோன்றிய அவர்கள்) என்னிடமே மறைவார்கள். துனை - விரைவு. சிகியனைய - மயில்போன்ற. தேவியர் எவரும் - பிரமாணி முதலிய எல்லாச் சக்திகளும். அம்மைதன் தனு - தேவியின் சரீரம். 3

இலய முற்றபின் றேவியே காகினி யாகி
நலனு ணர்ச்சியிற் சும்பநீ நோக்குதி நானே
குலவு கின்றனன் சமர்புரி யென்னலுங் கொடியோன்
உலைவு றும்படி தேவியோ டமர்செயற் குற்றான்.

கு - ரை: இலயம் - அடங்குதல்; ஒளித்தல். ஏகாகினி - ஓரேவடிவமுடையவளாய். தனியளாய் என்பதாம். நலன்உணர்ச்

சியில் - நன்மையாகிய அறிவில்லாத நலனுணர்ச்சியில் என்பதை வேற்றுமை மயக்கமாகக் கொண்டு நல்லறிவோடு எனப்பொருளுரைத்தலுமாம். நானே - நான் ஒருத்தியே, குலவுகின்றனன் - விளங்குகிறேன். உலைவுறும்படி - (உலகம்) நடுங்கும்படி. 4

**சுரர் தைத்தியர் துண்ணென விருவருந் தொலைவில்**
**சரம ழைக்குலம் பொழிந்திரு வருஞ்சர மழித்தார்**
**இருவர் கோரவெஞ் சமங்கண்டு புவனமு மிளைப்பக்**
**கரமு றும்பகைப் படைக்கல மெறிந்தனர் கடுகி.**

கு - ரை சுரர் தைத்தியர் இருவருந் துண்ணென - தேவரும் அசுரருமாகிய இருதிறத்தினரும் திடுக்கிடும்படியாக. இருவரும் - தேவியும் சும்பனுமாகிய இருவரும், சரம் - ஒருவர் மேல் ஒருவராக விட்டபாணங்களை. வெஞ்சமம் - கொடியபோர். புவனமும் - எல்லா உலகினரும், இளைப்ப - தளர்ச்சியடையும்படி. படைக்கலம் - ஆயுதம். கடுகி - விரைந்து. 5

**சமர்ச மத்துட னிருவருஞ் செய்துழித் தாழ்ந்தான்**
**அமரர் துண்ணெனச் சரமழை யம்மைமேற் பொழிய**
**விமலை லீலையாங் கோரவுங் காரத்தால் விளிப்ப**
**வமரர் யாவரு மம்மையைத் துதித்தன ரன்றே.**

கு - ரை: சமர் - போர், சமம் - சாமர்த்தியம். சமானம் எனினுமாம். செய்துழி - செய்த காலத்தில், உற்றுழி என்பதிற் போல அகரம் தொகுத்தல் விகாரமுற்றது. தாழ்ந்தான் - தாழ்வாகிய குணம் செயல்களையுடைய சும்பன், துண்ணென - நடுங்கும்படி; அச்சக்குறிப்புச்சொல். சரமழை - அம்புமாரி, உருவகம். விமலை - தேவி. மலமில்லாதவள், லீலையாம் - விளையாட்டாகிய, கோரம் உம்காரத்தால் - உக்கிரமான உம்காரசப்தத்தால், விளிப்ப - (சும்பனுடைய அம்புமாரிகளை) அழிக்கவும். 6

**அன்ன காலையிற் றேவிதன் றனுவையா வரண**
**மென்னும் வண்ணமே யேவினன் மூடின னெறுமோன்**
**கன்னிசா பத்தை யேவொடு முறித்தனள் கடியோன்**
**மின்னு சத்தியேந் திடவது பரிதியால் வீழ்த்தாள்.**

கு - ரை: எறுழோன் - சும்பனுனவன், தனுவை - உடம்பை, ஆவரணம் - மூடி, என்னும் வண்ணம் - என்று சொல்லும்படி, ஏவினுன் - அம்புகளினுல், சாபம் - சும்பனது வில்லை, பரிதி - சக்கரம். 7

பரிதி தன்கர நிகர்த்திடு மமலமாம் பரிசை
யெரியு மிழ்ந்திடு மொளியுடைச் சதமதி யென்னு
மூரிய கட்கமு மேந்தியே போர்செய வுன்னி
யரியெ னக்குதித் தம்மைமுன் னெய்தின னழிவான்.

கு - ரை: அழிவான் - அழிவதற்கு, அழிபவனுகிய சும்பன் எனலுமாம். பரிதிதன்கரம் - சூரியனுடைய கிரணத்தை, அமலம் - குற்றமின்மை. பரிசை - கேடயம், சதமதி என்னும் கட்கம் - சதமதி என்னும் பெயருள்ளவாள், அரி என - சிங்கம்போல. 8

கட்கந் தோலவன் கைக்கொண்டு தேவிமுன் கடுக
வுட்கு றும்படி யம்பினு லசியத ளோங்கு
புட்கு லஞ்சுழ லிரதமாச் சூதனும் போரில்
விட்பு ல்ம்பகை வர்க்களி விறலு றுந் தனுவும்.

கு - ரை: தோல் - கேடயம், அசி அதள் - வாளையும் கேடயத்தையும், புள்குலம் சுழல் - பறவைக்கூட்டங்கள் மேலே வட்டமிட்டுக் கொண்டிருக்கிற, ஓங்கு இரதம் - உயர்ந்த தேரும், மா - (தேரிற்பூட்டிய) குதிரைகள், சூதன் - தேர்ப்பாகன், தனு - வில்.

வி - ரை: போரில் பகைவரது வில்லால் மாண்ட வீரர்கள் வீரசுவர்க்கம் புகுவரென்பது நூற்கொள்கையாதலின் 'விட்புலம் பகைவர்க்களி விறலுறுந்தனுவும்' என்றூர் என்க. சும்பனுடைய வில் பகைவரை நிச்சயமாகக்கொன்று அவருயிரை வானில்சேர்க்கும் இயல்பினது ஆதலின் அங்ஙனம் கூறினுரெனலுமாம். 9

கண்ட மாக்கினள் கண்டுமுற் கரங்கொண்டு கடுக
துண்ட மாக்கினள் வாளியாற் சும்பனுந் துணியி
லண்ட ருட்கவே தேவிதன் னிதயத்தி லடல்சேர்
எண்ட குந்தன முட்டியா லெற்றினன் மாதோ.

கு - ரை: கண்டு - சும்பன்! அதனைப் பார்த்து. முற்கரம் - மட்டிப்படைக்கல மென்னும் ஆயுதம், இது சம்மட்டி வடிவ முள்ளது. துனையில் - விரைவாக, உட்க - அஞ்சும்படி, இதயம் - மார்பு, அடல் - வலிமை, எண்தகும் - எண்ணத் தகுந்த, தன முட்டி - தன்னுடைய விரல் முடக்கின கைகள், எற்றினன் - குத்தினன்.

வி - ரை: 'முற்கரங் காத்திரம் கூர்த்திகை முசுண்டி, பட்டஞ் சங்கு மட்டிப் படைக்கலம்' திவாகரம். 10

மிடல் படைத்திடுஞ் சும்பன்ற னுரத்திடை மேவார்
உடல்கி ழித்திடுந் தலத்தினற் றேவியு முறுத்தக்
கடலு டைப்புவிப் பதித்தவ னெழுந்துபின் கடுக
அடலை யிற்பொலி தேவியை யெடுத்தண்ட மடைந்தான்.

கு - ரை: மிடல் - வலிமை, உரத்திடை - மார்பில், மேவார் - பகைவருடைய, தலம் - விரல்விரித்த கைகள், உறுத்த - அழுத்தவும், (தாக்கவும்) அதனால், புவிபதித்தவன் - பூமியில் அழுந்தப் பெற்ற சும்பனானவன், கடுக - விரைவில்வந்து, அடலை - போர்க்களத்தில், எடுத்து - தூக்கிக்கொண்டு. 11

தான வாதிப னும்மமை தானுமம் பரத்தின்
மான வாகுப்போர் நெடும்பதம் புரிந்தனர் மன்னோ
ஞான நாயகி சும்பனைப் பிடித்துமண் ணண்ண
மேனி மிர்த்துச்சுற் றிக்கரத் தெறிந்தனள் விரைவில்.

கு - ரை: தானவாதிபன் - அசுரர் தலைவனான சும்பன், அமை - அம்மை; தேவி, அம்பரம் - வானம், மான - சமானமாக, வாகுப்போர் - தோள்வலிமையிற் செய்யும்போரினை, நெடும் பதம் - நெடுநேரம்; மண்நண்ண - பூமியையடையும்படி; விழும் படி; கரத்துமேல் நிமிர்த்து சுற்றி - கையினால் மேலேதூக்கிச் சுழற்றி. 12

பின்ன ருஞ்சினங் கொண்டவன் முட்டியாற் பெரும்போ
ருன்னி வந்திடத் தேவியுஞ் சூலத்தா னுரத்தைப்
பின்னஞ் செய்தகல் பிருதிவி யிடைப்பதிப் பித்தாள்
அன்ன வேலையி லத்திரி தீவத்தி யோடும்.

கு - ரை: முட்டி - விரல் முடக்கிய கைகள், உன்னி - நினைந்து, உரம் - மார்பு, பின்னம் செய்து - பிளந்து, அகல் பிருதிவியிடை - அகன்ற பூமியின்கண், பதிப்பித்தாள் - பதியும் படி (புதையும்படி) செய்தாள், வேலை - சமயம், அத்திரி - மலை, தீவு - கடலினுட்டிடர்கள், அத்தி - கடல். 13

அவனி கம்பித மூற்றிடச் சும்பனு மாவி
பவன நீங்கியே மடிந்தனன் பங்கயன் முதலோர்
தவமு றும்முனி சங்கமு மகிழ்ந்தனர் சகல
புவன முள்ளவ ருள்ளன யாவையும் பொலிந்த.

கு - ரை: கம்பிதம் - நடுக்கம், பவனம் - பூமியில். ஆவி - உயிர். பங்கயன் - பிரமன். முனிசங்கம் - முனிவருடைய கூட்டம். உள்ளவர் - உயர்திணையாயுள்ள தேவமானிடர் முதலியோர். உள்ளன - அஃறிணையாயுள்ள உயிர்ப்பொருள்கள். பொலிந்த - பொலிவெய்தி விளங்கின.

வி - ரை கொடியவனாகிய சும்பன் மரணமடைந்தமையால் தேவர்களும் முனிவர்களும் மகிழ்ந்தார்கள். உலகிலுள்ள எல்லாப்பொருள்களும் பொலிவுற்று விளங்கின. சும்பனுடைய ஆட்சியில் பொலிவற்று மாறுபாடடைந்திருந்த சூரியன் முதலிய பொருள்கள் அவனுடைய மரணத்தால் பொலிவெய்தி விளங்கியமையைப் பின்வரும் மூன்று கவிகள் தெரிவிக்கின்றன. 14

அண்ட மீமிசைப் பரிதியும் விளங்கின னதிகம்
மண்டு மன்பொடு நடித்தன ரமரர்தம் மாதர்
வண்டு றுந்தொடைக் கந்தருவர்க ளிசைப்பாட்டை
யெண்ட ரும்படி பாடின ரெழிலொடு மன்னே.

கு - ரை: பரிதி - சூரியன், விளங்கினன் - பிரகாசித்தான், தொடை - பூமாலை, கந்தருவர் - யாழ்வல்லோர். எண்தரும்படி - மதிக்கும்படி. 15

விண்ட லங்கிம லத்தினை யடைந்தது விசும்பும்
மண்டு முற்கையைப் பொழிதலை மறந்தன மார்க்கம்
அண்டி யேசென்ற நதியெலா மமரரிற் சில்லோர்
எண்ட கும்பறை முழக்கின ரியங்கின சுவந்து.

கு - ரை: விண்தலம் - வானம், நிமலம்- தூய்மை. விசும்பு- மேகம். உற்கை - கொள்ளிக்கட்டைகள். மறந்தன - ஒழிந்தன. மார்க்கம் - எப்போதும் இயல்பாகச்செல்லும் வழி. அண்டி - பொருந்தி. சில்லோர் - சிலர். பறை - பறை முதலிய வாச்சியங்கள். சுவந்து - நல்ல தென்றல் முதலிய காற்றுக்கள். இயங்கின- சஞ்சரித்தன; வீசின.

வி - ரை: சம்பவதத்திற்குமுன்பு, வானம் களங்கமுற்றும் மேகம் கொள்ளிகளைப் பொழிந்தும் நதிகள் திசைமாறிச் சென்றும் அமரர் வாச்சியவொலிசெய்தலை மறந்தும் நல்லகாற்று கள் வீசுதலொழிந்தும் உலகம் உற்பாதங்களுடன் விளங்கின. அவன் மாண்டதால் அவ்வுற்பாதங்கள் ஒழிந்தன. வந்து - காற்று. சுவந்து - நல்லகாற்று. 16

ஒளிருங் காருக பத்தியத் தோடுதக் கிணத்தின்
மிளிரு தாசன னாகவ னியமென மேவுங்
களிசெ யங்கிகள் வலஞ்சுழித் தெழுந்தன கருபம்
விளையு முற்பதப் பேரொலி சாந்தமாய் மேவும்.

கு - ரை: தக்கிணத்தின் மிளிர் உதாசனன் - தட்சணுக்கினி; தென்றிசைத்தீ. களிசெய் அங்கிகள் - மகிழ்ச்சியைத் தரும் வேள்வித் தீக்கள், 'மூன்றுவகைக்குறித்த முத்தீச் செல்வத்து' திருமுருகாற்றுப்படை, ககுபம்விளையும் - திக்குகளில் உண்டா கின்ற, உற்பதம் பேரொலி - பூகம்பமுதலியவற்றா லுண்டாகின்ற உற்பாதமாகிய பேரொலிகள். உற்பதம் - தீக்குறி, சாந்தமாய் மேவும் - அமைதியாயிருந்தன.

வி - ரை: "மூன்றுவகைக் குறித்த முத்தீ" என்பதற்கு "நாற்சதிரம் முச்சதிரம் வில்வடிவமாகிய மூன்றுவகையினைக் கருதியிட்ட குண்டத்தில் ஆகவனீயம் தெக்கணுக்கினி காருக பத்தியம் என்று பேர்பெற்ற முத்தீ" என உரையாசிரியரும் 'ஒன்று வேதத்தைவழங்கவும் ஒன்று தேவர்கட்குத் தட்சிணை கொடுக்கவும் ஒன்று பூலோகத்தை இலட்சை பண்ணவும் இவ்வாறாய முத்தீ' எனப் பரிமேலழகரும் உரைத்த உரைப்பகுதி கள் ஈண்டு அறிதற்குரியன. வேள்வித்தீ வலஞ்சுழித்தல் நன் மையின் அறிகுறியாம். 17

இன்ன வாறுபத் தெனும்பட லத்திடை யிசைக்கு
மன்ன காதையுங் களுக்கிவ ணன்பொடு மறைந்தேன்
மன்ன வைசிய தேவிமான் மியக்கதை மற்றுந்
துன்னு மன்பொடு கேட்பிர்யான் சொல்வலென் றறை
வான்.

கு - ரை: மற்றும் தேவிமான்மியக்கதை - மேலுமுள்ள தேவி மான்மியமாகிய கதையினை. சொல்வல் - சொல்வேன். 18

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று

## 11 தேவர்கள் நாராயணி தோத்திரமுரைத்த அத்தியாயம்

கொடிய சும்பன் றேவியினாற் குறைந்தே மண்ணினிடை
வீழ
நெடிய குலிசனுடன்வன்னி முதலாமமரர் திசை நெருங்கி
யுடலிலடங்கா மகிழ்வெய்தி யுரைத்த துதியை யுரைசெய்யு
மடலி லேனு யினுந்தேவி யருளா லிங்கு சிலமொழிவேன்.

கு - ரை:- குறைந்து - உயிர் குறைக்கப்பட்டு; கொல்லப் பட்டு; ஈண்டு குறைக்கப்பட்டு என்னும் செயப்பாட்டுவினை படு விகுதி குன்றிக் குறைந்து என நின்றது. குலிசன் - இந்திரன்; வன்னி - அக்கினி, நெருங்கி - நெருக்கமாகக்கூடி, உடல் - உடம்பு; ஆகுபெயராகக் கொண்டு உள்ளம் எனவுரைத்தலுமாம். அடல் - வலிமை.

வி - ரை: இது தேவர்கள் செய்த தோத்திரம். 'அவனரு ளாலே யவன்றாள் வணங்கி' யென்றாற் போலத் தேவியருளால் இங்கு சில மொழிவேன் என்றார். 1

தேவி துக்க மகலவருள் செய்வா யுலக மாதாவே
தேவி யசா சரங்கட்குச் சிறந்த தலைவி சரணநம
தேவி சகல வுலகிற்குந் திகழா தாரப் பூவானாய்
தேவி சீவர் சீவனமாய்த் திகழு மப்பி னுருவானாய்.

கு - ரை: சரணம் நம - நின் திருவடிகளுக்கு வணக்கம். ஆதாரம் பூ - ஆதாரமாகிய பூமி, சீவர் சீவனம் - உயிர்களின் பிழைப்பு, அப்பின் உரு - நீரின் வடிவம்,

வி -ரை: தேவி பூமியுருவாயிருந்துகொண்டு சகத்தைத் தாங்குகிறவள் ஆதலின் "தேவி சகல உலகிற்குந் திகழாதாரப் பூவானய்" என்று துதிக்கப்பெற்றுள். "ஜகத்தாத்ரீ" 'விதாத்ரீ 'ஸர்வாதாரா' 'மஹி' என்னும் லளிதையின் திருநாமங்கள் ஈண்டு உணர்தற்குரியன. 2

தேவி யனந்த வீரியையே செகத்தின் வித்தா மரிமாயா
தேவி பரமை செகமயக்கித் திகழு முத்தி தருபவளே
தேவி கவிக ளிதயத்திற் றிகழ்விஞ் ஞான மளித்
தருண்மா
தேவி வித்தை யுருவான திகழ்நின் கமல சரண்போற்றி.

கு - ரை: அனந்த வீரியை - முடிவில்லாத ஆற்றலுடையவள். வித்து - மூலா, அரிமாயா - விஷ்ணுமாயை, பரமை - மேலானவள், 'பரமா' லளி 618. செகம் மயக்கி - உலகினரைச் சமுசாரத்தில் மோகமடையும்படி செய்து, கவிகள் - கவிப்புலவர்கள், விஞானம் - மேலான அறிவு, மாதேவி - மகாதேவனுடைய மனைவி; சிவசக்தி.

வி - ரை: தேவி செகத்தை மயக்கி முத்திதருபவள் என்பதனை "மோகினி" 'முக்திதா' என்னும் லளிதா நாமங்களானுமுணர்க. தருக்கநூலோர் விஞ்ஞானம் வுலகவறிவு என்றும் ஞானம் மோட்சவறிவுஎன்றும் கூறுவர். தேவி வித்தையுருவினள் என்பதை "ஆத்மவித்தியா, 583. மகாவித்யா 584. ஸ்ரீவித்யா என்னும் அம்பிகையின் திருநாமங்களானுமறிக. வித்தையுருவம் பதினான்கு என்பர். அவை நால்வேதம் ஆறங்கம் மீமாம்சை நியாயம் புராணம் தருமசாஸ்திரம் என்பனவாம். 3

இனியிவண் ஈண்டுக்கூறுதன இடப்பெயரும் காலப் பெயரும் தொழிற்பெயரும் என மூன்றும்; அவற்றை உயர்திணை வினைக்குறிப்பு ஓதியவழி அன்னபிறவும் என்று வைத்து அதன் பின்னர் அச்சூத்திரத்தும் 'அன்னமரபின்'' என்றோதினதால் கொள்ளப்படுமென் றுணர்க. வடாதுவேங்கடம், மூவாட்டயது, செலவிற்று எனவரும். இவற்றின் உதாரண வாய்ப்பாட்டு விகற்பங் களும் அறிந்துகொள்க. இதன் பொருட்பெயர்முதல் அறுவகைப்பெயரினும்வரும்வரவினைத் தொகுத்தானும், விரித்தானும்ஓதாது, சிலவற்றைவிரித்தும், சிலவற்றைத் தொகுத்தும், சிலவற்றைக் கூறுதும் 'அப்பாற்பத்தும் குறிப்பு' என்று விட்டகருத்து என்னை எனின் இவை பெரும்பான்மையன என்றவாறு. பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம். (உஉ)

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி அஃறிணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே. (223)

என் - எனின், மேற்கூறிய வினைக்குறிப்பிற்கு ஈறு ஆமாறு உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: பன்மையும் ஒருமையுமான பால்களை அறிய வந்த அத்தன்மைத்தான மரபினையுடைய காலம் குறிப்பாய்வரும் வினைச்சொற்கள். அஃறிணையிடத்து மேற்கூறிய தெரிநிலைவினை ஈறுகளோடு ஈறு வேறு பாடில என்றவாறு.

மேற்கூறிய ... .... ... ... ...ம் டகரவுகரம் ஈண்டு மாட்டேற்றிக் கேலாமையின் ஆண்டே கூறப்பட்டது. அஃது ஒழிந்த ஐந்தீறும் மேல் எடுத்தோத்தானும் இலேசானும் வந்தவற்றிற்கு ஈறுயவாறு கண்டுகொள்க. உடைத்து எனவும், சிறிது எனவும், கருங்கோட்டது

எனவும், குறுங்கோட்டது எனவும், பொன்னன்னது எனவும், வடாது எனவும், மூவாட்டையது எனவும், உண்டிலது எனவும் தகரவுகரம் வந்தது. செம்மற்று எனவும், அன்று எனவும், குறுங்கோட்டிற்று எனவும், மேற்று எனவும், வைகற்று எனவும், செலவிற்று எனவும் றகரவுகரம் வந்தது. பொருள எனவும், அல்ல எனவும், கரிய எனவும், கோட்ட எனவும், பொன்னன்ன எனவும், வடக்கண்ண எனவும், மூவாட்டையன எனவும், செலவின எனவும் அகரம் ஈருய் வந்தது. இனி ஆகாரம்; இம்மணி நல்ல என்னும் உடம்பாட்டுக்குறிப்பிற்கு மறையாக இம்மணி பொல்லா என வந்தவாறு கண்டுகொள்க. "கதவ்வாற்றக்கதோ காழ்கொண்ட இளமூலை" என்புழிக் கதவ் என்பது கதத்தினையுடைய என்னும் பொருண்மைக் கண் வகரவீருய் வந்தவாறு கண்டுகொள்க. மேல் தெரிநிலைவினைக்கண் கூறிய டகரவுகரம் பூணை உடைத்து என்னும் பொருண்மைக்கண் பூட்டு எனவும், விளைவினையுடைத்து என்னும் பொருண்மைக்கண் வேலியாயிரம் விளையுட்டாக எனவும், குழிந்தகண்ணை யுடைத்து என்னும் பொருண்மைக்கண் குண்டுகட்டு எனவும் பொருள் இடம் காலம் பண்பு தொழில் உறுப்பு என்னும் அறுவகைப் பெயரும் அடியாக வந்தவாறு கண்டுகொள்க. (உ௩)

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
பிரிபுவேறு படூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய. (224)

என் - எனின், மேல் நிறுத்தமுறையானே விரவு வினையுணர்த்துவான் தொடங்கி, அவற்றது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்:- முன்னிலையிடத்தினைத்தனக்குப்பொருண் மையாக உணர்த்துஞ் சொல்லும், ஏவலைத் தனக்குப் பெருண்மையாகக்கொண்ட சொல்லும், வினைச்சொல்லை ஒழிபாகவுடைய சொல்லும், இன்மைஎன்னும் பண்பினை உணர்த்துதலுடைய சொல்லும் வேறு என்னும் சொல் லும், செய்ம்மன என்னும் சொல்லும், செய்யும்என்னும் சொல்லும், செய்தஎன்னும் சொல்லும் என்றுசொல்லப் படுகின்ற அவ்வடைவின்கண் நின்ற அவ்வெட்டுச்சொல் லும் ஒருகால் உயர்திணைக்கண்ணும், ஒருகால் அஃறி ணைக்கண்ணும் பொதுமையிற்றிரிந்து வேறுபட்டுநிற்கும் தொழிலினையுடையவாகி இருதிணையாகிய பொருட்கும் ஒன்றுபோன்ற உரிமையுடைய என்றவாறு.

முன்னிலை யென்பது முன் உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் தன்மையும் படர்க்கையும் கூறிய இடங்களுட் கூறாது நின்றது ஆகலானும் தான் பல வீற்றால் பயின்று வருவதாகிய வழக்குப் பயிற்சி யுடைமையானும் முற்றுச்சொல்லாதலானும் முன் வைக்கப்பட்டது. இனி அதன்பின்னர் வியங்கோள் மூற்றுச்சொல்லுமாய்ப்பெரும்பான்மை வரவு படர்க்கை என ஓரிடமாய்ப் பலவழக்கிற்று மாகலான் வைக்கப் பட்டது. இவை இரண்டும் அவற்றுப் பொருண்மையால் பலவீற்றை ஒன்றாக அடக்கப்பட்டன. அவற்றின் பின்னர் அவைபோல வழக்குப்பயிற்சி யுடைமையான் வினையெச்சம் வைக்கப்பட்டது. இஃது அச்சொல்லும் முடிபிலக்கணத்தா னொன்றாக அடக்கி ஓதப்பட்டது.

இன்மை செப்பலும் வேறென் கிளவியும் முன் னிலையும் வியங்கோளும்போல முற்றே யெனினும் வினையெல்லாம் போலாது சிறுவரவின ஆகலானும் வினைக்குறிப்பின் பன்மையானும் வினையெச்சத்தின் பின் வைக்கப்பட்டன. அவற்றின் பின்னர் செய்ம்மன என்பது தெரிநிலைமுற்றே எனினும் பலவாய்பாட்ட தாயினும் வழங்குவாரின்மையின் பின் வைக்கப்

பட்டது. அதன்பின்னர்ச் செய்யும் என்பது ஒருவழி முற்றும்நிலைமையும் உடைத்தாகலின் அதன்பின் வைக்கப்பட்டது. அதன் பின்னர் அதனோடு ஒத்த பெயரெச்சம் ஆகலின் செய்த என்பது வைக்கப்பட்டது.

இன்மை செப்பல் முதல் ஐந்தும் அச்சொற்கள் தம்மையே ஓதின எனினும் வேறு என்பதொன்றும் ஒழிய மற்றையன எல்லாம் பலவாய்பாட்டன என்று கொள்க. அஃதென்னையாமாறு எனின் இல்லை என்னாது இன்மை செப்பல் என்றதனால், இல்லை என்பதும் இல் என்பதும் என இரண்டாயிற்று. செய்ம்மன, செய்யும், செய்த என்பன உண்மன, தின்மன எனவும், உண்ணும் தின்னும் எனவும், உண்ட தின்ற எனவும், பலவாய்பாட்டவாயின. செய்ம்மன என்றால் உண்மன தின்மன பெறுமாறு என்னை எனின், அச்சொற்களின் பொருண்மையும் ஒருவழிச் செய்ம்மன என்பதனாற் சொல்லப்படுதலின் இஃது அவற்றிற்கெல்லாம் பொது வாய்பாட்டது என்பது.

அஃதேல் அவ்வாறுவது பொருளுணரநின்றவழி யன்றே; இஃது அச்சொல் தன்னை உணர நின்றவிட மால் எனின், அஃதொக்கும் பொருண்மையால் பொதுமை யுடைய சொல்லினைக் கூறவே அதனுள்வகையாகிய சொற்களும் "தன்னின முடித்தல்" என்னும் தந்திர வுத்தியான் அடங்கும் என்பதுபோலும் கருத்து. (உ௬)

அவற்றுள்,
முன்னிலைக் கிளவி
இஐ ஆயென வருஉம் மூன்றும்
ஒப்பத் தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும். (225)

என் - எனின், மேல் நிறுத்தமுறையானே முன்னிலைவினை உணர்த்துவான், அவற்றுள் ஒருமையுணர்த்தல் நுதலிற்று.

இ - ள்:- அவ்வெட்டனுள் முன்னிலைச் சொல்லா மாறு உணர்த்துவல். இ, ஐ, ஆய் என்று சொல்லவரு கின்ற மூன் றீற்றுச் சொல்லும் உயர்திணை ஆண்பாலும் பெண்பாலுமாகிய ஒருமைப்பாற்கும் அஃறிணை ஒரு மைப்பாற்கும் மிகுதி குறைவின்றி ஒப்பத்தோன்றும் என்றவாறு.

ஒன்றென்றாரே எனினும் உயிருடைய ஒன்றன் மேலது பெரும்பான்மை என உணர்க.

உ - ம்:- உண்டி என இகரவீறு எதிர்காலமேபற்றி வரும். உண்ணாநிற்றி எனச் சிறுபான்மை நிகழ்கால வரவு உண்டேனுங் கொள்க. இவ்வீற்று வினைக்குறிப்பு உண்டேனும் அறிக. ஐ - உண்டனை, உண்ணா நின் றனை, உண்குவை, உண்பை, கரியை எனவரும். ஆய் - உண்டாய் உண்ணா நின்றாய் உண்பாய் எனவும், கரியாய் செய்யாய் பொல்லாய் எனவும் வரும். உண்ணுதி எனவும், உண்டிலை உண்ணாநின்றிலை உண்ணலை எனவும், உண்டிலாய், உண்ணாநின்றிலாய், உண்ணலாய் எனவும் வரும் மறைவாய்பாடும் அறிக(உரு)

இர்,ஈர் மின்என வருஉம் மூன்றும்
பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்
சொல்லோ ரனைய என்மனார் புலவர். (227)

என் - எனின் முன்னிலைப் பன்மை உணர்த்தல், நுதலிற்று

இ - ள்:- இர், ஈர், மின் என்று சொல்ல வருகிற மூன்று ஈற்றுச்சொல்லும் உயர்திணைக்கண் பல்லோ ரிடத்தும் அஃறிணைக்கண் பலவற்றினிடத்தும் சொல்லு தலை ஒருதன்மையாக வுடைய என்று சொல்லுவர் ஆசிரியர் என்றவாறு.

உ-ம்:- இர் - உண்டிர் உண்ணாநின்றிர் உண்பிர் எனவும், கரியிர் எனவும் வரும். மின் - உண்மின் தின்மின் என எதிர்காலமே பற்றிவரும். உண்ணாநின் மின் என நிகழ்காலவரவு உண்டேனும் கொள்க. உண்டிலிர் உண்ணாநின்றிலிர், உண்ணலிர் எனவும், உண்டிலீர், உண்ணா நின்றிலீர், உண்ணீர் எனவும், உண்ணன்மின் எனவும் வரும் மறையும் அறிக.

மேலைச் சூத்திரத்து எதிர்காலமொன்றினும் வரும் இகரம் மூன்கூறினமையான் ஒழிந்தமுன்னிலையீறும் கொள்ளப்படும். அவையாவன மொழிக்கீறும் எனப் பட்ட இருபத்துநான்கிற்றுள்ளும் எடுத்தோதியவை யொழித்து ஒழிந்தன எனக்கொள்க.

உ-ம்:- நட, வா, விரி, ஈ, கொடு, கூ, மே, கை, நொ, போ, வெள என இவை உயிரீறுடன் எடுத்தோதான. இவை முன்னிலை யேவவொருமை; யெடுத்தோதின இகர ஐகார வீற்றுள்ளும் அறியெனவும் உரையெனவும் ஏவற்கண் வருவனவும் அறிந்துகொள்க. உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், தெவ், தாழ், கொள் என இவை புள்ளியீறு பதினொன்றும் வந்தவாறு.

ஊட்டு என்பது குற்றியலுகரவீறு. இதுவும் ஏவ லொருமை; ஆய் எனவும், இர், ஈர் எனவும், மின் எனவும் ஓதினமையின் யகர னகரங்களில் ஐகாரங்கொள்ள வெண் .... ... ... னின் அவை அவ்வெழுத்தீறன்றிச் சொல்வாய்பாடாய் வேறு வருதலின் இவை வேறாகக் கொள்ளப்பட்டன எனக் கொள்க. உண்ணும், தின்னும் எனப் பன்மைக்கண் உம்மீறு மகரவீற்றின் வேறு பாடாகக் கொள்க. லகரவீறு மறைக்கண் உண்ணல் எனவரும். அல்லீறும், ஆலீறும் அழேல் என வரும் ஏலீறுங் கொள்க. ணகரவீற்றுள் உண்டுகாண், சொல்லிக்காண், வருங்காண் என்னும் காணீறும் கொள்க.

உண்டுபார் என்பதோ எனின், அஃதுஒருசொல்லா தலன்றி அத்தொழிலைச் செய்து அதன்விளைவை மேற் பார் என்னும் ஒருமை தோன்ற நின்றலின் வேறு சொல் என்க. உண்டுகாண் என்பதும், இவற்றுள் வேறன்றோ எனின் அது சொல்வான் கருத்தன்று என்க.

அவன் வருவன்காண் என்பதோ எனின், ஆண்டு காண்டற்றொழில் கருத்தன்மையின் அசைநிலையாகல் தத்தம் குறிப்பானே வேறொருபொருள் உடைத்தாக லான் எனக்கொள்க. உண்கிடு உண்கிடா என்பனவோ எனின் அவை சான்றோர் செய்யுட்கண் இன்மையிற் "கடிசொல் இல்லை காலத்துட்படினே" என்பதனாற் கொள்ளப்படும். அது முன்னிலையாயவாறு என்னை எனின், இவற்றுள் உண்கிடு நீ எனப் பிறமுன்னிலை போல் முற்றாய், முன்னிலைப்பெயர் கொள்வதன்றி அவனுண்டு என்றானும், யான் உண்டு என்றானும் பிறபெயர்வந்த பிறதொழிலினை நீ உடம்படு என்று முன்னிலைநீர்மை தோன்றநிற்றலின் முன்னிலையாயிற் றுப்போலும்.

இவற்றுள் உண்கிட என்பதொருவழி நீயுண்கிடா எனப் பெயர்கொண்டு நிற்றலும் உண்டு.

இனி உண்ணுங்கள் என்பதோ எனின் அது உண்ணுங்கள் எனக் கள்ளொடு உண்ணும் என்பது அசைநிலையடுத்தவும் ஈறுமரீஇயவாறெனக் கொள்க. முன்னிலை யீற்றுவகையெல்லாம் தொகுத்து நோக்க எழுத்துவகையான் இருபத்துநான்கீறும், சொல்வகை யால் யகரவீற்றுள் ஆய் என்பதும், ரகரவீற்றுள் இர் ஈர் என்பனவும், னகரவீற்றுள் மின் என்பதும், ணகர வீற்றுள் காண் என்பதும், மகரவீற்றுள் உம் என்பதும், லகரவீற்றுள் அல், ஆல், எல் என்பனவும் ஆக முப்பத்துமூன்றாயின. பிறவாறு உளவேனும் அறிக.

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே. (227)

என் - எனின், விரவுவினை யெட்டனுள்ளும் முன்னிலைவினை யொழிந்து ஒழிந்தனவற்றிற்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்தல் நுதலிற்று.

இ - ள்: முன்னிலையொழித்து எஞ்சிய சொற்கள் எழுமூன்றிடத்தும் பொருந்தி ஐந்துபாற்கும் உரிய வாம், அவைதோன்றும்நெறிக்கண் என்றவாறு.

அவ்வேழனுள்ளும் மேற்சிறப்புவிதியுடைய வியங்கோளும், வினையெச்சமும், செய்யும் செய்த என்பனவும் ஒழித்து ஒழிந்தன இன்மை செப்பலும் வேறென் கிளவியும் செய்ம்மனவும் என்ற மூன்றற்கும் ஈண்டு உதாரணம் காட்டுதும்.

உ - ம்: யானில்லை, யானு நீயுமில்லை, யானுமவனு மில்லை, யானுநீயுமவனுமில்லை, நாமில்லை, நீயில்லை, நீயிரில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அது வில்லை, அவையில்லை என இன்மைசெப்பல் பல வந்த வாறு காண்க. யான்வேறு, யானுநீயும்வேறு, யானு மவனும்வேறு, யானு நீயுமவனும்வேறு, நான்வேறு, யாம்வேறு, நீவேறு, நீயிர்வேறு, அவன்வேறு, அவள் வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு என வேறென்கிளவி வந்தவாறு. யான்செய்மன, யானுநீயும் செய்மன, யானுமவனுஞ்செய்மன, யானு நீயுமவனுஞ் செய்மன, நாம்செய்மன, யான்செய்மன, நீசெய்மன, நீயிர்செய்மன, அவன்செய்மன, அவள்செய்மன, அவர் செய்மன, அவைசெய்மன, எனச் செய்மனவந்தவாறு. செய்மன என அகரவீற்றதே எனினும் யான்செய்மன என்புழி யான்செய்வேன் என்றும், நீசெய்மன என்புழி நீ செய்வை என்றும், அவன்செய்மன என்புழி அவன் செய்வன என்றும் முற்றுச்சொல் நீர்மைத்தாய்ப் பால் காட்டும் என்பது. இஃது இறந்தகாலவழக்கிற்று.

6. * * *

"அவை" என்பது அப் பதினாலு சைவமும் பூருவ பக்கங்கள். சுத்த சைவமொன்றுமே, சித்தாந்தம் என்கின்றது. அது வருமாறு ஞானசித்தியில்,

अष्टाविंशति ज्ञानांशमेवमूलोदितागमम ।
एवं शैवं त्रिधा भेदं चतुष्पादभवाश्रयम ॥
चर्यादि ब्रह्म चर्यादि सिद्धान्ताश्रम उच्यते ।
ऊर्ध्वशैवं महाशैवमनादि शैवादिशैवकम ॥
भेदाभेदद्वयं शैवं गुणशैवं ज्ञानशैवम् ।
अ(ादि) शैवं क्रियाशैवमवान्तरं योगशैवम् ॥
ज्ञानशैवं शिवः शैवं शैवभेदं चतुर्दश ।
शुद्धशैवं तथामुख्यं चतुष्पात्प्रणवान्तकम ॥

என்றற்றொடக்கத்தான் உணர்க. அன்றியும் தீக்ஷை விவேகத்தில்,

शुद्धशैवं स्वसिद्धान्तं शैवभेदं किमुच्यते ।
अनादिशैवं मिश्रं च मिश्रामिश्रं त्रिधा हि च ॥
गुणशैवं चतुर्थं च पञ्चमान्तरभेदकम् ।
महाशैवं षष्ठमं तु भेदशैवं तु सप्तमम् ॥
अभेदं चाष्टमं विद्यात् (योग) शैवं नवं तथा ।
ज्ञानशैवं दशं विद्यादूर्ध्वमेकादशं भवेत् ॥
द्वादशं त्वाज्ञाशैवं स्यादनुशैवं त्रयोदश ।
अध्वशैवं चतुर्दश्यां तत्त्वशैवं तथान्यथा ॥
षोडशं शुद्धशैवं च शैवभेदमिति स्थितम् ।

என வருமாற்றானும் உணர்க. அன்றியும் பஞ்சாக்கர பிரணவவிவேகத்தில்,

शैवं द्वादशयोर्भेदं द्वादशं पञ्चमोच्यते ।
कर्तव्ये कर्मकार्ये च ज्ञानकार्ये त्रिसाधनम् ॥

पाशं पशुपतिज्ञेयं सर्वशैवानुशासनम् ।
भस्म पञ्चमलं चैव सर्वशैवानुकूलकम् ॥
ऊर्ध्वशैवं तु प्रथममनादि शैवं द्वितीय(क)म् ।
आदिशैवं तृतीयं तु चतुर्थमनुशैवकम् ॥
अवान्तरं पञ्चमं च मिश्रकं शैवषष्ठकम् ।
भेदशैवं तथा सप्त गुणशैवं तथाष्टमम् ॥
आज्ञाशैवं तु नवमं योगिशैवं दशं भवेत् ।
एकादशं ज्ञानशैवं द्वादशं शुद्धशैवकम् ॥
एतद् द्वादश सर्वार्थं शुद्धशैवं प्रधानकम् ।
पूर्वोक्तपञ्चमं प्रोक्तमूर्ध्वशैवानुगो मनुः ॥
अधः शैवं तु सामान्यं द्विधा तद्भेदमुच्यते ।

என வருமாற்றானும் உணர்க. 6

7. * * *

"முத்திரையினோடு" என்பது ஈண்டுக் கூறிய பதினான்கு சைவருக்கும் பொதுவிலக்கணமும் ஊர்த்துவ சைவர்க்குச் சிறப்பிலக்கணமும் கூறுகின்றது. அது வருமாறு அதிலேயே,

शैलंमुद्रार्थसिद्धान्तं मन्त्ररूपमतः शृणु ।
सर्वकेशजटामेकं भस्मोद्धूलितगात्रकम् (विग्रहम्) ॥
रुद्राक्षस्य व्रतधरं नित्यकर्मानुशासनम् ।
शिवार्चनकरः स्वामी समीपे गतिरूर्ध्वगः ॥

என வருமாற்றான் உணர்க. 7

8. * * *

"பின்னிகழும்" என்பது அநாதிசைவ லக்ஷணம் கூறுகின்றது. அது அதிலேயே கூறப்பட்டது.

मन्त्रयोगपरः शीलगुरुवर्णपदार्थकः ।
एकादशजटाजूटभस्मरुद्राक्षधारणम् ॥
शिवकार्यगतिः शीलगुरुशुश्रूषया सह ।
शिवशास्त्रपरिग्राह्यशिवयोगनिरूपकः ॥
अनादिव्यापको नित्यस्त्रिपदार्थस्वसाधकः ।
पाशाभावस्थाणुपतेर्योज्याक्षार्थं निरूपकः ॥
नित्याचारतपः शीलोऽनादिशैवस्तथा इति । 8

9. "ஆதிசைவம் பன்னிரண்டு சடைகள் காட்டி"

* * *

"ஆதிசைவம்" என்பது ஆதிசைவ லக்ஷணம் கூறுகின்றது. அதுவும் அதிலேயே,

आदिशैवः स्वतन्त्रार्थसाधकाचार्यलक्षणः ।
तान्त्रिको मान्त्रिको वीर्यो यान्त्रिको गुणवान् प्रभुः ॥
द्वादशाः जटिनोभावं भस्मरुद्राक्षधारणम् ।
क्रियाङ्गः सर्वगोद्धूलस्तत्त्वार्थस्य विचारकः ॥
शिवज्ञानगतश्श्रेष्ठासाधको मोक्षकामिनः ।
एतल्लक्षणसंयुक्तः शैवसिद्धान्तगोचरः ॥

9

எனவருதலால் அறிக.

10. * * *

"அநுசைவம்" என்பது அநுசைவ ரிலக்கணமும், அவாந்தர சைவரிலக்கணமும் கூறுகின்றது. அது அதிலேயே,

दशभेद जटाजूटो भस्मरुद्राक्षधारणः ।
चर्यादि साधकेभ्यश्च भक्तिज्ञानविशारदः ॥

என்பதனானும்,

क्रिया योगस्तथाज्ञानं सामान्यः शैवसम्भवम् ।
नवमस्य जटाजूटो भस्मरुद्राक्षधारणम् ॥
आद्यन्तशून्यः परमः शिवः कर्ता इति स्थितः ।
तद्भाव मुक्ति भावित्य मवा.........स्थितम् ॥

என்பதனாலும் அறிக. 10

11. * * *

"முன்னவின்ற" என்பது மிச்சிரசைவமும் பேதசைவமும் ஆமாறு கூறுகின்றது. அதிலேயே,

क्रिया पूजा समं कुर्यात्सद्भावहृदयः शिवः ।
अनाद्याश्रयसर्वार्थसाधको मिश्रशैवकः ॥

எனவும்,

सर्वत्र शिवशक्त्यर्थपालनं परिपालनम् ।
सप्तमस्य जटाजूट भस्मरुद्राक्ष धारणम् ॥
पदमुक्ति स्वमात्मानं भावितं भेदशैवकम् ।

எனவும் வருமாற்றான் உணர்க.

12. * * *

"எட்டெனவே" என்பது குணசைவமும் ஆஞ்ஞாசைவமுமாமாறு கூறுகின்றது. அது அதிலேயே,

जटा चूडामणिर्भस्म धारणं भद्र...श्रमम् ।
त्रिगुणैस्तु त्रिमूर्तिः स्यात् भावानां गुणशैवकम् ॥

எனவும்,

पञ्चसादा पञ्चकृत्यसिद्धसिद्धान्तसाधकः ।
त्रिजटां पञ्चजटां वा क्रियायोगविकल्पकः ॥
भक्तिं ज्ञानं च वैराग्यं क्रियाकाण्डस्य साधकम् ।
नित्यानुष्ठानसम्बन्ध मुक्तिः (च) प्राप्यते गुणे ॥
ज्ञानयोग क्रिया चर्या साधकाऽऽज्ञार्थ शैवकः ।
पदमुक्ति भवप्रापं शिवाज्ञा परिपालनः ॥

எனவும் வரும். 12

13. * * *

"சடையைந்து" என்பது யோக சைவமும் ஞான சைவமுமாமாறு கூறுகின்றது. அதிலேயே,

जटापञ्चसमायुक्तो योगाङ्गाष्टस्य साधनम् ।
भस्म रुद्राक्षसम्बन्धं नित्यकर्मप्रवेशनम् ॥
शुद्धसत्यं समाश्रेयमहिंसाद्यर्थसम्भवम् ।
सारूप्यं सफलं प्राप्यं योगशैवे इति स्थितम् ॥

எனவும்,

चतुर्दशजटाजूटसमयादि पञ्चसम्भवम् ।
लिङ्गार्चनसमायुक्तं भस्मरुद्राक्षधारणम् ॥
(त्रिजटान्यशिवाकार भस्मरुद्राक्षधारणम् ।)
पाशपञ्चमलत्याग पशुपाशविमोचनम् ॥
सर्वभावं परित्यज्य अभावे भावमाश्रितः ।
सदा समाधयो मुक्तस्थितचित्तप्रवृत्तकम् ॥
सन्यासो मुण्डनं चैव ईषणात्रयवर्जितः ।
एतल्लक्षणसम्युक्तं ज्ञानशैवप्रवर्तकम् ॥

எனவும் வருமாற்றான் உணர்க. 13

14. * * *

"இவை யனைத்தும்" என்பது அத்துவ சைவமும் சாமானிய சைவமுமாமாறு கூறுகின்றது. அது அதிலேயே,

चतुर्जटा जूट सम्बन्ध......पञ्चसम्भवम् ।
लिङ्गार्चनसमायुक्तं भस्मरुद्राक्षधारणम् ॥
प्रासादसम्बन्धविभवं प्रदक्षिणनमस्कृतम् ।
नित्यकर्म तथाचारः पद्प्राप्त्यध्वशैवकम् ॥

எனவும்,

पूर्वोक्तविधिना तत्र मन्त्रं विश्वादि साधनम् ।
पशुपत्यादयो भेदं शिववाक्यं शिवोद्भवम ॥
जटी केशी शिखी मुण्डी चतुष्पादप्रयत्नतः ।
भस्मरुद्राक्षसम्बन्धः सामान्यशैवलक्षणम् ॥

எனவும் வரும். 14

15. * * *

"சுத்த சைவம்" என்பது ஈண்டுச் சித்தாந்தமென மேலாய்க்கூறும் சுத்தசைவத்திலக்கணம் உணர்த்துகின்றது. அது அதிலேயே,

शुद्धशैवप्रवृत्त्यर्थं द्वादशैव तु कारणम् ।
सामान्याध्व......च तस्माच्चैवं चतुर्दशम् ॥
शुद्धशैवस्य सम्बन्धं जटी केशधरोऽथवा ।
शिवपूजादि कर्तव्यं भस्मरुद्राक्षधारणम् ॥
ज्ञानदीक्षाः पञ्चगुणाः सद्गुणाः करुणोदयाः ।
ज्ञानभेदं चतुष्पादं नित्यानुष्ठानसाधनम् ॥

रुद्राक्षमुपवीतं च उष्णीषं चोत्तरीयकम् ।
भस्मापि शुद्धशैवानां पञ्चमुद्राः प्रकीर्तिताः ॥
शैववेष इति ख्यातं शैवभेद इति स्थितम् ।

எனவும் முற்கூறியவாறே,

शुद्धशैवं तथा मुख्यं चतुष्पाद् प्रणवान्तकम् ।

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. 15

16. * * *

"நவகண்டமாஞ் சுத்தசைவம்" என்பது பூருவ பக்ஷமாய்ச் சுத்த சைவதந்திர பேதமாயுள்ள பதினான்கு சைவமுணர்த்திச் சித்தாந்தமான சுத்த சைவத்தியல்பு கூறுவான் முன்னர்ச் சுத்த சைவ தந்திரத்திற் கூறும் பிரமேயங்கள் ஒன்பது வகுப்பாயிருக்கும் என்றது. அது திருமந்திரத்தில்,

கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்க ளொன்பதுங் கண்டா யரும்பொருள்
கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. (1425)

என வருமாற்றான் உணர்க.

இவ்வொன்பதனுள் வேதாந்த மொன்றலாமல் மற்றனைத்துஞ் சித்தாந்தத்திற்கு மொக்குமெ.......... னீண்டு வேதாந்தப் பிரமேயமே உணர்த்துவதென்று யிற்று. 16

17. * * *

"கூறிவரு மேலான சுத்தசைவம்" என்பது சுத்த சைவத்திற் சித்தாந்தநிலை மற்றும் கூறினும் வேதாந்த

சித்தாந்த சமரசம் பண்ணுமாறு கூறுவதே சித்தாந்தப் பொருளென உணர்த்துகின்றது. அது திருமந்திரத்தில்,

மெய்யான வேதத்தி னந்தமே வேதாந்தம்
நையாத ஞானத்தி னந்தமே சித்தாந்தம்
மெய்யா மிரண்டு மிறை ...
.... ... ... ... வாறே.

எனவும்,

ஆகம மொன்பா னதிலான நாலேழு
மோகமி லாலேழு பேதமு முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்
றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே. (1429)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலயம்
அடையாறு, சென்னை-20.

எனவும்,

எட்டான வுட்சம யம்மிவை மாமாயை
யெட்டாம் புறச்சம யத்துடன் யாவையுந்
தொட்டான மாயை யிருமாயை தோயாது
விட்டார் சிவமாவர் வேதாந்த போதரே.

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க. இவ்வாறு ஞானசித்தியினும்,

त्रिवेदं कर्मकाण्डार्थं तत्सर्वं वेदरूपकम् ।
(तद्) अन्तरं परजीवात्मद्वयोरैक्यं परात्परम् ॥
तत्संप्रदायसिद्धयर्थं दशावस्थाविवेच (ध) कम् ।
तत्तत्सन्मार्गसिद्धयर्थं तत्तत्सन्मार्गसाधनम् ॥
तत्तद्विद्या महाविद्या तद्वेदान्तविधिस्थिता ।
वेदान्तं शैवसिद्धान्तं द्वयोरैक्यं शिवात्परम् ॥
शुद्धशैवं स्वसंवेद्यं शुद्धसन्मार्गरूपकम् ।

எனவும் பிறவும் வருமாற்றான் உணர்க.

## ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜை.

தருமபுர ஆதீனத்தின் இரண்டாவது குருமூர்த்திகளாகிய இவர்கள் குருபூஜைவிழா 16-12-51 அன்று சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்த ஆலயத்திற்கு எழுந்தருளி ஆராதனைமுடித்து அன்பர்கட்கு அருட்பிரஸாதம் வழங்கினார்கள். ஆலயத்தின் முன்னிலையில் காலையிலும் மாலையிலும் சைவசமயச் சொற்பொழிவு நிகழ்ந்தது. இரவு ஏழு மணிமுதல் சித்தூர், இசைமன்னர், கானகலா சேவக திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தக்க இன்னிசைக் கருவிகளுடன் இன்னிசைக்கச்சேரி நடத்தினார்கள். விழாநினைவுமலராக 'நித்தியபூஜா லக்ஷணஸங்கிரகம்' என்றநூல்வெளியிடப்பெற்றது. ஆதீனப்பாடசாலை மாணவர்கள் திருமுறைப்பாராயணம் நிகழ்த்தினார்கள். ஆதீனத்திருக்கூட்டத்து அடியார்களும், ஆதீனக்கல்லூரி, ஆதீனத்தேவாரப்பாடசாலை, ஆதீனசிவாகமபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## சீகாழியில் நூல்நிலையத் திறப்புவிழா.

தருமபுர ஆதீனத்தைச்சேர்ந்த சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் திருஞானசம்பந்தர்கோயிலில் அமைக்கப்பெற்ற திருஞானசம்பந்தர் நூல்நிலையத்தை 24—12—51 திங்கள்மாலை மாயூரம் ஸப்ஜட்ஜ் பிரமஸ்ரீ R. இலக்ஷ்மணஐயர் M. A. B. L. அவர்கள் திறந்துவைத்துத் திறப்புரைமொழிந்தார்கள். உள்ளூர் சபாநாயக முதலியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. T. அரங்காச்சாரியார் M. A. B. L அவர்கள் 'நூல்நிலையம்' என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். இவ்விழாவிற்குப்பெருநிலக்கிழார் திருவாளர் S. சுப்பராய முதலியார் அவர்கள் தலைமைவகித்து விழாவைச் சிறப்புற நடத்திவைத்தார்கள்.

## சென்னையில்......

25, 26—12—51 ஆகிய இருநாட்களிலும் சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்ற தமிழ்நாடு புத்தகாலய மகா நாட்டிற்கு ஆதீன வெளியீடுகள் அனைத்தையும் அனுப்பியதுடன் ஆதீனத்தின் பிரதிநிதியாக வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் அனுப்பிவைக்கப்பெற்றார்கள்.

தேவாரப் பண்ணிசை மகா நாட்டிற்கும் ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர், திரு. வேலாயுத ஓதுவார் அவர்கள் ஆதீனப் பிரதிநிதியாக அனுப்பிவைக்கப்பெற்றார்கள். அதன் சார்பில் நடைபெற்ற நவசந்திப் பண் ஆராய்ச்சியிலும், ஆதீனத்தின் சார்பாக ஆதீன சிவாகம பாடசாலை ஆசிரியர், சிவாகம வித்துவான் சிவத்திரு. S. சுவாமிநாதசிவாசாரியார் அவர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாடு செய்யப்பெற்றது.

அடையாறு, சென்னை-20.

Regd. No. M. 4454. GNANASAMBANDAM

## மதிப்புரைகள்:

### வ. உ. சி. மலர்.

மாதுங்கா பம்பாய் தமிழ்ச்சங்கம் இலக்கியவளம்பெருக ஏற்ற வகையிலெல்லாம் பணிபுரிந்துவருகின்றது என்பது அன்பர்கள் அறிந்ததே. அப்பணிகளில் புலவர்தினங்களைக்கொண்டாடுதல், போட்டிகள் வைத்து மாணவர்களுக்குப் பரிசுவழங்குதல், நாடக அரங்கேற்றம், இலவசவாசகசாலை, இலக்கிய வகுப்புக்கள் ஆகிய மிகமிகச் சிறந்தன. அப்பணிகளோடு நூல் வெளியீட்டுப்பணியும் இப்பொழுதுதொடங்கியிருக்கிறது அதன்விளைவாக முதன்முதல் வெளியிட்டது இம்மலர்தான். யோகி சுத்தானந்தபாரதியார், திருகூடசுந்தரம், வையாபுரிப்பிள்ளை, மு. வரதராசன், சோமசுந்தரபாரதியார், த. பு. நவநீதகிருஷ்ணன், ஏ. ஸி பால்நாடார், ஏ. ஜி. வெங்கடாச்சாரி ஆகியோர்கள் வ. உ. சி. அவர்களைப்பற்றி எழுதிய கட்டுரைகள் பதின்மூன்று இதில் அடங்கியுள்ளன. கிரௌன் 1 x 8. பக்கம் 88 விலை ரூ. 1—4—0.

### முருகப்பெருமான் திருப்பதிகங்கள்.

திருத்தணிகையிலும், வைத்தீஸ்வரன்கோயிலிலும் எழுந்தருளியிருக்கின்ற முருகப்பெருமான்பாடிய பதிகம் இரண்டு இதில் அடங்கியுள்ளன. பதிகமாதலின் ஒவ்வொன்றும் பத்துப்பாடலிலேயே முடிந்திருக்கின்றது. எளிய இனிய நடை. இயற்றியவர்கள் தேவகோட்டை சைவசித்தாந்தப்புரவலர், தமிழ்வள்ளல் மெய்யப்பசெட்டியார் அவர்கள். 'அவர்கள்வாழ்க்கையே இனிமைத்தமிழில் இறைவனைப் பாடிப் போற்றும் வாழ்க்கையாக அமைந்துள்ளது' என்று, இதற்கு ஆசியுரை அருளியதிருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அருணாசலதேசிகசுவாமிகள் அவர்கள் குறிப்பிட்டிருப்பது ஆசிரியரது கவித்திறனை அறிவிக்கும். பதினாறு அறிஞர்களின் சாற்றுக் கவிகள் நூலின் பெருமையை சாற்றி அழகுசெய்கின்றன. பன்மொழிப்புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை M. A. B, L M. O. L அவர்களின் முகவுரை பதிகப்பாடல்களின் பண்புகளைப் பகர்கின்றன.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 9—1—1952.